

261. பேய்க்கோலமா, போர்க்கோலமா ?

பெரிய மலைகளை, உயர்ந்த மரங்களைப் பார்த்தால், 'வானத்தை அளக்கத்தான் ஓங்குகின்றனவோ ?' என்று தோன்றக்கூடும், சில குழந்தை யுள்ளங்களுக்கு. 'வானளந்து நிற்கும் வராக கிரி' என்று வருணிக்கிறார் ஒரு மலையை ஒரு புலவர். அப்படி நிமிர்ந்து உயர்ந்து தோன்றுகிறதாம் அம் மலை. ஆனால் கம்பனோ 'இந்த ஆசாமிகளைக் கொண்டே விண்ணையும் அளந்து பார்க்கலாம் — அத்தகைய உயர் திருவாளர்கள் !' என்று அரக்கர் தலைவனாகிய கானுடைய சேனை வீரர்களை வருணிக்கிறான்.

இப்படி நிமிர்ந்து நின்று விண்ணையும் அளக்கிறவர்கள், காலால் மண்ணை அளக்கக்கூடிய வலிமை யுள்ளவர்களாம். இவர்களுடைய பரந்த மார்பைக் கண்ணும் அளக்க முடியாதாம். எண்ண முடியாத போர்களில் வானவர்களை வென்று வெற்றி சூடியவர்களாம் :

விண்அள விடநிமிர்ந்(து)
உயர்ந்த மேனியர்,
கண்அள விடஅரு
மார்பர், காலினால்
மண்அள விடுநெடு
வலத்தர், வானவர்
எண்அள விடஅருஞ்
செருவென்(று) ஏறினர்.

[அளவிடஅரு மார்பர் — அளவிடுதற்கு அருமையான பரந்த மார்பினர். வலத்தர் — வலிமையுள்ளவர்கள். எண்அளவிட அருஞ்செரு — எண்ணினால் கணக்கிடமுடியாத மிகப்பல போர்கள். வென்று ஏறினர் — வென்று மேம்பட்டவர்கள்.]

காலனுக்கும் காலன் !

இந்தச் சேனைவீரர்களின் இந்தக் கூட்டத்தைப் பார்த்தால், இவர்களுக்கு மரண பயமே இல்லையென்று தோன்றும். மரணம்தான் இவர்களைக் கண்டு பயப்படவேண்டுமோம். காடு அடர்ந்ததுபோல் அடர்ந்து

படர்ந்து செல்லும் இச்சேனை இயங்குவதைப் பார்த்தால் காட்டுத்தீயே இப்படி உருவம்கொண்டு படர்வதுபோலத் தோன்றும்:

அந்தகன் அடிதொழு(து)
அடங்கும் ஆணையார்,
வெந்தழல் உருவுகொண்-
டனைய மேனியார்.

[அந்தகன் - யமன். ஆணை - கட்டளை. கொண்டனைய - கொண்டாற் போன்ற.]

இவர்கள், சூலாயுதம் முதலான ஆயுதங்களைப் போலவே தங்கள் கோரப் பற்களையும் கூசாமல் போரில் உபயோகிக்கக் கூடியவர்கள். ஏன், அந்தக் கொடிய கண்களால் பார்த்தாலும் எதிரி பைசல்தான்! அந்தச் செம்பட்டை மயிரே சுட்டுப் பொசுக்குவது போலத் தோன்றுமாம்:

சூலமும் பாசமும்,
தொடர்ந்த செம்மயிர்ச்
சாலமும், தறுகணும்
எயிறும் தாங்கினர்!

[பாசம் - எதிரிகளைக் கட்டுவதற்கு உரிய பாசக் கயிறு. தொடர்ந்த - (இங்கே) அடர்ந்த. செம்மயிர்ச்சாலம் — செம்பட்டை மயிர்த்திரள். எயிறு— பற்கள், (இங்கே) அரக்கர்களின் கோரப் பற்கள்.]

முகங்களில் சுயசரிதம்

இப்படி இயற்கை ஆயுதங்களும் செயற்கை ஆயுதங்களுமாய், 'காலனுக்கும் காலன் தான் இப்படிப் போகிறானோ?' என்று பார்த்தவர் பிரமிக்கும்படி அவ்வளவு பிடிவாதமான பயங்கர ஒருமையுள்ள யந்திரம் போல் போய்க் கொண்டிருக்கும் ஆசாமிகளின் முகத்தைத் தான் பாருங்கள்:

குஞ்சரம் குதிரைபேய்
குரங்கு கோளரி
வெஞ்சினக் கரடிநாய்
வேங்கை யாளிஎன்(று)
அஞ்சுறக் கனல்புரை
முகத்தர்!

[குஞ்சரம் — யானை. கோளரி — வலிய சிங்கம். யாளி — சிங்கத்தைக் காட்டிலும் வலிமையுள்ளதும், இக்காலத்தில் இல்லாததுமான ஒருவகை மிருகம் என்பர். கனல்புரை—கனலை ஒத்த.]

சுபாவங்களுக்கு ஏற்ற சொரூபங்கள்! அகத்தின் அழகு முகத்தில் தெரிகிறது — குதிரை முகம், யானை முகம், கரடி முகம், புலி முகம், சிங்க முகம், யாளி முகம், நாய் முகம், பேய் முகம் என்றெல்லாம் பிரமிக்கும்படியாக முகங்களிலே! இந்தக் காலத்திலும் மிருக சுபாவங்களும் பேய்த்தன்மையும் இப்படியெல்லாம் முகங்களில் பிரதிபலிக்கவில்லை யென்று சொல்ல முடியுமா? இந்த ஜாபிதாவில் இல்லாத நரி முகங்களை இன்றைய உலகில் அதிகமாய்க் காணவும் கூடும்!

இப்படிப்பட்ட திவ்ய முகங்களில் ஒன்று போதாதா ஒருவனுக்கு? மேது அரக்க வீரர்களில் சிலர் ஏழும் எட்டுமான திருமுகங்களும் கைகளும் உடையவர்களாம். சேனைத் தலைவர்களில் முக்கியமான ஒருவனுக்குப் பெயரே திரிசிரன், அதாவது முத்தலையன். வேறொருவனுடைய திரு

நாமம் தூஷணன்: அந்த முகத்தைப் பார்த்தாலே 'எல்லாரையும் தூஷிக்கிறது அது!'' என்று எண்ணத் தோன்றுமாம். இத் தூஷணன் கரனுக்கு அடுத்த பதவியில் இருப்பவன். இந்தச் சேனைத் தலைவர்களெல்லாம் தங்கள் படைகளோடு முதற் பெருந்தலைவனான கரனைச் சூழ்ந்துகொண்டு போகிறார்கள்.

வரவேற்பு!

ராட்சஸ சேனை ராமலட்சுமணர்களை நெருங்கிவிடுகிறது. அந்தப் புழுதிக் கூட்டமும், மரங்களும் புதர்களும் ஒடிபடும் சடசட ஓசையும், காட்டு மிருகங்களும் பறவைகளும் நடுங்கி நிலைகெட்டு ஓடும் ஓட்டங்களும், ராமலட்சுமணர்களுக்குப் படையெடுப்பை முன்கூட்டி அறிவித்து விடுகின்றன.

தூளியின் படலை வந்து
தொடர்வுற, மரமும் தூறும்
தாளிடை ஒடியும் ஓசை
சடசட ஒலிப்ப,—

[தூளி—புழுதி. படலை — கூட்டம். தொடர்வுற—தொடர. தூறு — புதர்கள். தாளிடை — கால்களில்.]

அந்த ஒலி கேட்டதும், லட்சுமணன் பளிச்சென்று போருக்குப் புறப்படுகிறான்.

'ராமனுக்கோ, தேவிக்கோ எப்போது என்ன நேரிடப் போகிறதோ?' என்று எப்போதும் ஜாக்கிரதையாக இருக்கிறவனல்லவா? இதற்காக எப்போதும் வில்லேந்தி அம்பறுத்தூணி தாங்கிக் கவசம் தரித்து உடைவாள் கட்டி வீர உத்ஸாகத்துடன் இருப்பவ



னல்லவா? ராமனுக்காவது போர்க்கோலம் செய்து கொள்ள வேண்டும்; லட்சுமணனுக்கோ புதிதாக ஒன்றும் தயார் செய்து கொள்ள வேண்டாம். லட்சுமணன் கோலமே எப்போதும் போர்க் கோலம்தான், பர்ணசாலையிலும் வெளியிலும். இப்படியிருக்கிறவனுக்குப் பேய்க் கோலமாய் அரக்கர்கள் படையெடுத்து வருகிறார்கள் என்று தெரிந்து விட்டால் ஆத்திரம் கொஞ்சமாகவா ஏற்படும்?

லட்சுமணனுடைய நிலை கண்டதும் ராமன் முனிவர்களுக்குத் தான் செய்து கொடுத்த அபய தானத்தைக் குறிப்பிடுகிறான். 'வீர! உன்னை வேண்டிக் கொள்கிறேன்: ஜானகியை ஜாக்கிரதையாய்ப் பாதுகாப்பாயாக' என்று சொல்லி விட்டுப் போர்க்கோலம் பூண்டு கொள்கிறான்,

> மரன்படர் கானம் எங்கும்
> மதர்பட வந்த சேனை
> கரன்படை என்ப தெண்ணிக்
> கருநிறக் கமலக் கண்ணன்.

[மரன் — மரங்கள். மதர் — மதம், கொழுத்த வெறி.]

திடீரென்று மரங்கள் புதர்களெல்லாம் மதயானைகள் போல வரும் அரக்கர்களை ஈன்று விட்டது போலத் தோன்றியதும், சூர்ப்பணகை கொண்டு வருவதாகச் சொன்ன கரன்படை வந்து விட்டது என்று ராமனுக்குத் தெரிந்து விட்டது. லட்சுமணனுக்கும் தெரிந்தது தான்.

அந்தச் சேனைகளோடு போர் செய்வதற்கு இந்தச் சகோதரர்கள் ஒருவரோடொருவர் போட்டி போட்டுக்கொண்டு முன் வருவதை அடுத்த வாரம் பார்க்கலாம்.



பி.ஸ்ரீ

262. காடும் தீயும் காற்றும்

ஓசையாலும் தூசியாலும் சேனை நெருங்குவது தெரிந்ததுமே லட்சுமணன் — எப்போதுமே போர்க்கோலத்தில் இருப்பவன் — போருக்குப் புறப்பட்டான். ஆனால் தண்டகாரணிய வாசிகளான முனிவர்களுக்கு,

ஆர்அ றத்தினொ(டு)
  அன்றிநின் றூர்,அவர்
வேர்அ றுப்பென்!
  வெருவன்மின் நீர்!

[அன்றி – அல்லாமல்; பொருந்தாமல். வெருவன்மின் – பயப்படாதேயுங்கள்.]

என்று அபயம் அளித்திருக்கும் ராமன், இப்போது வலிய வந்து எதிர்க்கும் அரக்கர் குழாத்தைத் தானே எதிர்த்து அழிக்க விரும்பினான்.

தின்னுகின்ற சோம்பல்

அதற்கு உரிய ஆற்றல் தனக்கு இருப்பதாகத் தமையன் கருதவில்லையோ என்று அருமைத் தம்பி வருத்தப்படலாகாதே, அதற்காக,



வெறிக்கொள்பூங் குழலி னாளை,
வீர! நீ, வேண்டி னேன்யான்,
குறிக்கொடு காத்தி

[வெறிக்கொள் பூங்குழலினாள் — மணமுள்ள காட்டுப் பூக்களைச் சூடிக் கொண்டிருக்கும் சீதை. குறிக்கொடு காத்தி — குறியாகக்கொண்டு பாதுகாப்பாயாக.]

என்று வேண்டிக் கொண்டான். அண்ணன் தம்பியை இப்படி 'வீர' என்று விளித்து வேண்டிக் கொண்டும் தம்பியின் படபடப்பும் போர்வெறியும் அதைச் சரியாக வாங்கிக் கொள்ளவில்லை. ராமன்மேலுள்ள வரம்பு கடந்த அபிமானம் இதற்குக் காரணம்.

ஆகவே, 'என்ன, அண்ணா? இப்படி நீயே போருக்குப் புறப்பட வேண்டுமா? என்னை ஏவிப் பணி கொள்ளலாகாதா? என் திறமையைக் குறைவாக மதிக்கலாமா?' என்றெல்லாம் பேசுகிறான். ராமன் பேச்சைக் காது வாங்கிக் கொள்ளவில்லை; ராமன் போர்க்கோலத்தைக் கண் பார்த்ததும், கை துடிக்கிறது, தோள் துடிக்கிறது; நாக்கும் துடிக்கிறது; 'நீ போக வேண்டாம் அண்ணா! என்னைப் பார் அண்ணா! என் தோளைப் பார்; என் திறமையை விரைவில் கண்ணாரக் காண்பாய்' என்றெல்லாம்:

'மீளருஞ் செருவின் விண்ணும்
மண்ணும்என் மேல்வந் தாலும்,
நாள்உலந்(து) அழியும் அன்றே!
நான்உனக்(கு) உரைப்ப தென்னே?
ஆளியின் துப்பி னாய்! இவ்
அமர்எனக்(கு) அருளி நின்(று)என்
தோளிணைத் தின்னு கின்ற
சோம்பினைத் துடைத்தி' என்றான்.

[மீளருஞ் செருவில் — மீளுதற்கு அரிய போரில். நாள் உலந்து — ஆயுள் நாள் ஒழிந்து. ஆளியின் துப்பினாய் — ஆளி போன்ற வலிமையுடையவனே. அமர் — போர். சோம்பினை — சோம்பலை.]

போருக்குப் புறப்படுகிறவர்கள் 'திரும்பி வருவோம்' என்ற எண்ணம் இல்லாமல் தான் போகிறார்கள். ஆனால் லட்சுமணனைப் போன்ற வீரர்களுக்கோ 'எதிரிகள் மீளப் போவதில்லை' என்பதுதான் எண்ணம். ஆயுள்

ஒழிந்தவர்களே தன்னைப் போன்ற வீரர்களை எதிர்ப்படுவார்களாம் அமர்க்களத்திலே. 'இவ்வளவு தூரம் லட்சுமணனும் தன்னை விளம்பரப் படுத்திக்கொள்ள வேண்டுமா அண்ணனிடம்?' என்று நினைக்கிறீர்கள் அல்லவா? லட்சுமணனுக்கும் இந்த நினைப்பு வரத்தான் செய்கிறது.

நான் உனக்(கு) உரைப்ப(து)
என்னை ?

என்று லட்சுமணனே ராமனைக் கேட்கிறான், பாருங்கள்.

இப்போது லட்சுமணனுடைய பேராசை பேராசை தான்.

அமர் எனக்(கு) அருளி

என்ற பிரார்த்தனையைப் பாருங்கள். ஏதோ பிரசாதத்தை அருளுவது போல் அருள வேண்டுமாம் போரை. மேலும்,

அமர் எனக்(கு) அருளி நின்(று)

என்கிறான். ராமன் தனக்குப் போர்த்துணையாகவும் வரக்கூடாதாம். சும்மா நின்று ராமன் பார்த்துக் கொண்டிருக்க வேண்டியது தான்.

தோளினைத் தின்று நின்ற
சோம்பினைத் துடைத்தி!

என்று . எவ்வளவு பரிதாபமாய்க் கெஞ்சும் குரலில் முடிவு பெறுகிறது லட்சுமணனுடைய பிரார்த்தனை!

கண்ணீர் வடிக்கும் பூங்கொடி

இந்த லட்சுமணனின் பிரார்த்தனையுடன் பேச்சு ஓய்ந்துபோகிறது. செயலே பேசுகிறது சிறிதுநேரம். ராமன் பதில் சொல்லவில்லை. மௌனம் பொதுவாகச் சம்மதத்தை அறிவிக்கும் என்பர். ஆனால் இப்போது ராமனுடைய மௌனம் மறுப்பைத்தான் அறிவிக்கின்றது. லட்சுமணன் அண்ணலின் ஆணை தாங்கிச் சீதையைக் காத்து நிற்கின்றான்:

நின்றனன் இருந்தான், கண்ணீர்
நிலனுறப் புலர்கின் றாள்பால்.

[நிலன் உற — நிலத்திலே உதிரும்படி. புலர்கின்றாள் பால் — வருந்திக் கொண்டிருக்கும் சீதைக்கு அருகே.]

பர்ணசாலைக்கு எதிரே, அரக்கர்களின் பெருங்கூட்டம், கோரப் பற்கள் தோன்ற அட்டகாசம் செய்யத் தொடங்கிவிடுகிறது. இடிக்குரல்கள் யுத்தகோஷம் செய்கின்றன. அந்தச் சேனை சமுத்திரத்தைக் கடுங் காற்றும் பெருமழையும் கலந்து பெய்யக் கோஷித்து அலைவீசிப் பொங்கி வரும் கருங்கடல்போலக் கண்டு சீதை, கண்ணீர் முத்து முத்தாக நிலத்தில் உதிர, நிலைகுலைந்து பர்ணசாலையில் வாடிப்போன பூங்கொடி போலச் சாய்ந்து சோர்ந்து நிற்கிறாள்.

ராஜ சிங்கமும் மத யானைகளும்

இந்தச் சீதையின் நிலையையும் ராமன் பார்த்துக் கொண்டுதான் வருகிறான். கொடிய அரக்கர்களின் கும்மாளங்களைக் கண்டு அவர்களை நோக்கித்தான் வருகிறான். மலைக் குகையிலிருந்து வெளிப்படும் ராஜ

சிங்கம்போலக் கோபத்தோடு நிமிர்ந்து கம்பீரமாக வருகிறான், கோதண்ட பாணியாக.

இதையெல்லாம் கம்பன் வருணிப்பதாகவே தோன்றவில்லை; நம் கண்முன்னே காட்டிவிடுகிறான், ஏதோ ஒரு மந்திரக் கண்ணாடி வாயிலாகக் காட்டுவதுபோல:

குழையுறு மதியம் பூத்த
கொம்பனாள் குலைந்து சோரத்
தழையுறு சாலை நின்றும்
தனிச்சிலை தரித்த மேரு,
மழையென முழங்கு கின்ற
வாள்எயிற்(று) அரக்கர் காண,
முழையினின்(று) எழுந்து செல்லும்
மடங்கலின் முனிந்து சென்றான்.

[குழை — காதணி. உறு — பொருந்திய. மதியம் — சந்திரன். கொம்பு — பூங்கிளை. அனாள் — அன்னாள், ஒத்தவள். குலைந்து — நடுங்கி நிலைகெட்டு. சோர — தளர்ந்து தள்ளாடிச் சாய. தழை உறு சாலை — பர்ணசாலை. தனிச் சிலை — ஒப்பற்ற வில்லாகிய கோதண்டம். மேரு — மனிதர்களில் மகாமேரு போன்றவன்; புருஷமேரு. வாள் எயிறு — கூரிய வாள்போலப் பிரகாசிக்கும் கோரப் பற்கள். முழை — மலைக்குகை. மடங்கலின் — ஆண் சிங்கம் போல. முனிந்து — கோபங் கொண்டு.]

பூர்ண சந்திர பிம்பமானது குழை என்ற காதணியுடன் ஒரு பூங்கொம்பில் பூத்திருப்பதுபோலக் காணும் சீதையின் முகமண்டலம் இப்போது எவ்வளவு வாட்டமும் பெருங்கவலையும் கொண்டிருக்கிறது! அந்த முகத்திற்கே உரிய மலர்ச்சி எங்கே இப்போது? திவ்ய காந்திதான் எங்கே? ஓர் அதிசயப் பூங்கொம்பு போன்ற அருமைத் திருமேனி நடுங்கி நிலைகுலைந்து விட்டதே, என்ன தளர்ச்சி, என்ன தள்ளாட்டம்! சோர்ந்து குலைந்து விழப் போகும் பூங்கொம்பு போல் அல்லவா காண்கிறாள்?

இதே சமயம் பர்ண சாலையிலிருந்து வெளிப்படும் வீர புருஷனைப் பாருங்கள். 'வீர புருஷனா? சிலை ஏந்திய மலையன்றோ?' என்று ஒரு கணம் பிரமிக்கிறோம், அந்தப் புருஷமேருவை நோக்கியதும். அடுத்த கணமே, 'தன் குகைக்கு எதிரே வந்து வீரிடவும் துணிந்த மதயானைகளை நோக்கி அலட்சியமாக வரும் ராஜ சிங்கம்தானோ?' என்ற ஆச்சரியம் ஏற்படுகிறது. இப்படி வரும் ராமனை, வெளியே யுத்தகோஷம் செய்து கொண்டிருக்கும் ராட்சஸக் கூட்டமும் நம்மைப் போல வியந்து நோக்குகிறது.

கவிஞன் கண்ணுக்கு அந்த அரக்கர் பெருங்கூட்டம் ஒரே மூங்கிற் காடாக அடர்ந்து காண்கிறது. அந்தக் காட்டை அழிக்கப்போகும் தீயும் அங்கே அந்தக் காட்டிலேயே தோன்றி யிருக்கிறதாம். அந்தத் தீயே சூர்ப்பணகை. அவள் சுட்டிக் காட்ட அரக்கர்கள் ராமனை நோக்குகிறார்கள்.

ராட்சஸக் காட்டை எரிக்கும் தீ சீதை மட்டுமல்ல, சூர்ப்பணகையும் தான். இந்தத் தீ இங்கிருந்தும் அந்தத் தீ அங்கிருந்தும் அழிக்கப் பார்க்கிறது. இந்த இரண்டு தீக்களுக்கும் உதவப் போகும் காற்று ராமபாணம்!



அகம்பனுடைய பேச்சைக் கேட்டுக் கரன் சிரித்த சிரிப்பிலே உலகமெல்லாம் நிலை குலைந்து போய்விட்டது போலத் தோன்றுகிறதாம். உதட்டுச் சிரிப்பன்று; தோள் குலுங்கச் சிரித்த பெருஞ் சிரிப்பு, பெரிய, பொல்லாத, ஏளனச் சிரிப்பு. இப்படித் தோள் குலுங்க உலகம் குலுங்கச் சிரித்த கரனுக்கு, 'இந்த நமது வீரத் தோள்கள் எத்தனை போர்களில் எத்தனை தேவர்களை, அம்மியானது கடுகு மிளகு முதலியவற்றை அரைப்பது போல் அரைத்துத் தள்ளியிருக்கிறது!' என்ற நினைப்பு உண்டாகிறது. உண்டானதும், 'இந்த அம்மி அரைக்க உணவுப் பொருள் வேண்டாமோ? இந்தச் சிறு மானிடன் போதுமா? கடுகு அம்மியை உடைத்துப் போடுமோ?' என்று பொருள்படக் கரன் பேசுகிறானில்லை, ஏசுகிறான்.


வளைந்தன சேனையும் வில்லும்

கரனுடைய சிரிப்பும் ஏச்சுமே கட்டளையாகக் கொண்டு போர் தொடங்குகிறது அரக்கர் கூட்டம். தங்கள் கோபத்தினாலேயே ராமனைச் சுட்டுவிடப் போகிறவர்களைப் போல் சூழ்ந்து கொள்கிறார்கள். இப்படி அரக்கர் வளைந்து கொண்டதும், ராமனுடைய வில்லும் வளைந்து கொடுக்கிறதாம்:

வளைந்த காலையில், வளைந்த(து)அவ்
இராமன்கை வரிவில்.

[காலையில் – பொழுதில். வரிவில் – கட்டு அமைந்த வில்.]

கோதண்டம் வளைந்ததும் விளைந்த போரை விளம்ப யாராலாகும்? கவிஞனுடைய பாடல்கள் நம்மையும் வளைத்து அந்தப் போர்க்களத்திற்கே தள்ளிக் கொண்டு போய் விடுகின்றன. ஒன்று, பத்து, நூறு, ஆயிரம், லட்சம், கோடி என்று அறிய முடியாதவண்ணம் புறப்பட்டுக்கொண்டே இருக்கின்றன ராமபாணங்கள். இவை ராமன் மேல் ஆயுதங்களை எறிந்தவர்களையும், எறிய நினைத்தவர்களையும் வதைக்கின்றனவாம்:



263. அமர்க்களப் பிரசங்கம்

ராமனைக் கண்ட கரன் தன் சேனை வீரர்களை நோக்கி, ‘எதிரியோ மனிதன், ஒரே மனிதன்; போர் செய்ய வந்திருக்கும் நம் அரக்கர் சேனைக்கோ காட்டில் நிற்கவும் இடமில்லை. இனி நாம் அடையப்போகும் வெற்றி தான் என்ன பயனுடையதாகும்? ஆகையால் வீரர்களே! நீங்கள் எல்லாரும் சும்மா பார்த்துக்கொண்டு நிற்கவேண்டியதுதான். நான் ஒருவனே இந்த மனிதனைக் கொன்று தின்பேன்’ என்று சொன்னான். லட்சுமணனும் ராமனை நோக்கி, ‘அண்ணா, நீ சும்மா பார்த்துக்கொண்டு நில்லு’ என்று சொன்னான் அல்லவா? அந்த லட்சுமண வீரத்திற்கு இந்தக் கரனுடைய வீரம் எந்த அம்சத்தில் குறைந்துபோயிருக்கிறது? ஆம், ஒரே ஒரு அம்சத்தில் - தருமம் இந்தக் கட்சியில் இல்லை, அவ்வளவுதான்.

கடுகா அம்மியை அரைக்கும்?

அகம்பன் என்ற ஓர் அரக்கன், கரனுடைய வார்த்தை காதில் விழுந்ததும் தலைவனிடம் விரைந்து வந்தான். ஏதேதோ தீய முற்குறிகளை எடுத்துக் காட்டி, ‘எதிரியை அலட்சியம் செய்யலாகாது’ என்று எச்சரிக்கை செய்தான். ஆனால் சகுனம், சோசியம் முதலான மூட நம்பிக்கைகள் கரனிடம் பலிக்குமா? முதலில் ஒரு பெருஞ்சிரிப்பு, ஏளனச் சிரிப்பு; பிறகு ஏளனப் பேச்சு—இவை அகம்பனின் எச்சரிக்கையை ஊதித் தள்ளுகின்றன:

உரைத்த வாசகம் கேட்டலும்,
உலகெலாம் உலையச்
சிரித்து, ‘நன்றுநம் சேவகம்!
தேவரைத் தேய
அரைத்த அம்மியாம் அலங்(கு)எழில்
தோள், அமர் வேண்டி
இரைத்து வீங்குவ, மானிடற்(கு)
எளியவோ?’ என்றான்.

[சேவகம் – பராக்கிரமம். அலங்கு எழில் தோள் – அசைந்து விளங்கும் வீரத்தோள். அமர்வேண்டி – போர் விரும்பி. இரைத்து வீங்குவ– பருத்துப் பூரிப்பன. மானிடற்கு – ஒரு மனிதனுக்கு.]

எறிந்நார்என, எய்நார்என,
நினைத்தார்என, எறிய
அறிந்நார்என, அறியாவகை
அயில்வாளியின் அறுத்நான்.

[அயில் வாளியின் — கூர்மையான பாணங்களால்.]



திரிசிரன் வதம்

திரிசிரன் என்னும் தலைவன் தன் சேனையுடன் வந்து ராமனோடு போர் செய்கிறான். அந்த அரக்கர்கள், இருள் நெருங்கி வந்து ஒரு விளக்கை வளைப்பது போல், ராமனைச் சூழ்ந்து கொள்கிறார்கள். ஆனால் அந்தச் சேனை வீரர்களை விரைவில் வளைத்துக்கொண்டு வீரசுவர்க்க வாசிகள் ஆக்குகின்றன ராமபாணங்கள் :

வஞ்சகத்(து) அரக்கரை
வளைத்து, வள்ளல்தான்,
செஞ்சரத் தூய்மையால்
தேவர் ஆக்கினான் !

[செஞ்சரத் தூய்மை — தன் சிறந்த பாணங்களின் தூய தன்மையால்.]

கடைசியாகத் திரிசிரன் என்ற தலைவனும் மாண்டு போனான். திரிசிரனின் வீழ்ச்சி ஏதோ ஒரு மலையின் மூத்தலைச் சிகரம் விழுந்து விட்டது போலத் தோன்றியதாம். இந்த வீழ்ச்சி கண்டதும் மிஞ்சி நின்ற அரக்கர்-சேனை அதைரியம் அடைந்துவிட்டது. தூஷணன் என்ற பிரசித்தி பெற்ற சேனாதிபதி விலக்கியும் நிற்காமல் அரக்கர்கள் ஓட்டம் பிடிக்கிறார்கள். இதுவரையில் தோல்வி அறியாதவர்கள் திரிசிரனின் வதம் கண்டதும் இன்னது செய்வதென்று தெரியாமல் ஓரே ஓட்டமாக ஓடிவிடப் பார்க்கிறார்களாம் :

திரிசி ராஎனும் சிகரம்மண்
சேர்தலும், செறிந்த
நிருதர் ஓடினர், தூடணன்
விலக்கவும் நில்லார்.

[செறிந்த — நெருங்கி அடர்ந்திருந்த. நிருதர் — அரக்கர்கள்.]

ராம பாணங்களும் சொல்லின் பாணங்களும்

ராமபாணத்திற்குப் பயந்து ஓடிப் போகும் அரக்கர்களைத் தடுத்து நிறுத்தித் தூஷணன் ஒரு போர்க்களப் பிரசங்கம் நிகழ்த்துகிறான். இந்த வீரப் பேருரை,

வச்சை யாம்எனும் பயம்மனத்(து)
உண்டென வாழும்
கொச்சை மாந்தரைக் கோல்வளை
மகளிரும் கூசார் ;

நிச்ச யம்மெனும் கவசம்தான்
நிலைநிற்ப தன்றி
அச்சம் என்றும்ம(து) ஆருயிர்க்(கு)
அருந்துணை ஆமோ?

[வச்சை — வசை. நொச்சை — இழிவு. கோல்வளை - உருண்டை வடிவமான வளை; பிரம்புபோல் வளையும் தன்மையுள்ள வளை. கூசார் — அஞ்ச மாட்டார்கள். ஆருயிர்க்கு — அரிய உயிருக்கு.]

அரக்கருள்ளத்திலே அணைந்து கொண்டிருந்த வீரக்கனலை மீண்டும் விசிறி ஜ்வாலை செய்து விடுகிறான் தூஷணன் எடுத்த எடுப்பிலே. 'அச்சம் ஒருபோதும் ஆருயிர்க்கு அருந்துணையாகாது; நெஞ்சுத் துணிவாகிய கவசமே வாழ்க்கைப் போரில் ஆருயிர்க்கு வீர கவசம்' என்ற இப்பாட்டின் பிற்பகுதி அரக்கர்களுக்கு மட்டுமா, இன்று நமக்கும் உதவக்கூடியது தான். ஆம், ராட்சஸ வீரமும் ராட்சஸ மனத்துணிவும் நமக்கும் அவசியமானவை தான். இவற்றை ராட்சஸர்கள் போல் உபயோகிப்பது தான் தவறு, கொடுமை.

மேலும் பேசுகிறான் தூஷணன்: 'தேவர்களோடும் மூவர்களோடும் முன்பு நேர்ந்த போர்களில் யார் ஓட்டம் பிடித்தார்? தேவர்கள் அல்லவா பயந்து ஓடினவர்கள்? உங்கள் முன் நிற்க முடியாமல் அன்று பயந்தோடிய தேவர்களிடந்தான் இந்த ஓட்டத்தை நீங்கள் கற்றுக் கொண்டீர்கள் போலும்!'


ஏவர் ஓடினர் இராக்கதர்?
நுமக்(கு)இடைந்(து) ஓடும்
தேவ ரோடுகற்(று) அறிந்துளி
ரோ?மனம் திகைத்தீர்!

[ஏவர் — எவர். இடைந்து — பின்னிட்டு. தேவரோடு — தேவரிடம். அறிந்துளிரோ — அறிந்து கொண்டீர்களோ.]
என்ற தூஷணன் பேச்சு சுரீரென்று தைத்து அரக்கர்களுக்கு எவ்வளவு சுரணை உண்டாக்கி யிருக்கவேண்டும்!

'இப்படி ஒரு மனிதனுக்கு இத்தனை வீரர்கள் பின்னிட்டு ஓடுகிறீர்களே, உங்கள் கையிலுள்ள ஆயுதங்களோடு ஊருக்குப் போய் ஒளித்து கொள்ளப் போகிறீர்கள். அங்கே உங்கள் மனைவிமார்களையாவது சந்திக்கப் போகிறீர்களா?' என்று ஒரு கேள்வி போடுகிறான் தூஷணன். மறுபடியும் சுடச் சுட, 'அங்கே அந்தப்புரத்தில் உங்கள் வெற்றியை எதிர்நோக்கியிருக்கும் அந்தப் பெண்மணிகளுக்கு நீங்கள் உங்கள் எதிரியை 'எதிர்த்துச் செய்த போரில் மார்பிலே தைத்த அம்புகளைக் காட்டுவீர்களா? அன்றி, இந்த அடர்ந்த வனத்தில் இப்படியும் அப்படியுமாய்ப் புதர்களில் நுழைந்து ஓடுகையில் மரக்கிளை முதலியன தாக்கிப் பட்டிருக்கும் முதுகுப் புண்ணைத்தான் காட்டப் போகிறீர்களா உங்கள் குலமங்கையருக்கு?' என்று கேட்கிறான் தூஷணன்.

இந்த அமர்க்களப் பிரசங்கத்தினிடையே இந்தக் கேள்வி - அம்புகள் ராம பாணங்களைக் காட்டிலும் எவ்வளவு கூர்மையாக வந்து விழுகின்றன! அந்த ராமபாணங்களையும் எதிர்த்து நிற்கவேண்டும் என்ற ஆத்திரத்தையும் ஆவேசத்தையும் எப்படி இதயத்திலே மூட்டிவிடுகின்றன?

அமர்க்களப் பிரசங்கம் இன்னும் முற்றுப் பெறவில்லை. வீர வுரையைத் தொடர்ந்து கேட்போம் அடுத்த வாரம்.



264. சொல்லும் வில்லும் விளைத்த சாகஸம்

கரன் தம்பியான தூஷணனின் வீர உரை படிப்படியாக ஆவேசத்தை அதிகப்படுத்தி வருகிறது. அதைக் கவனித்துக் கொண்டே மேலும் பேசுகிறான் தூஷணன். 'இதோ இங்கே இதற்கு மேலும் ஏக்கம் என்பது ஒன்று உண்டா? அந்த நம் பகைவனான மனிதன் கொடிய போர்த்திறமை காட்டுகிறான் — உண்மைதான். அதற்காக நீங்கள் இப்படிக் கோழைத் தனம் காட்டி ஓடவேண்டுமா? இந்தக் கோழைத்தனமே அம்மனிதனை உத்ஸாகப்படுத்தி அவனுக்கு மேன்மேலும் கொடிய போர்வெறி கொடுத்து விடுமே! உங்கள் குல முதல்வனான பிரதாப லங்கேசனை நினைத்துப் பாருங்கள்' என்று தூஷணன் பேசியவண்ணம் ராவண பக்தியைத் தூண்டி விடுகிறான்.

மூக்கும் முதுகும்

இப்படித் தூண்டிவிட்டு, எரியும் நெருப்பில் ஒரு குடம் நெய்யைக் கவிழ்த்து விடுவதுபோல் ஒரு வார்த்தை சொல்லுகிறான்:

தாக்க ரும்புயத்(து) உம்குலத்
தலைமகன் தங்கை
மூக்கொ டன்றியும் முதுகொடும்
போம்பழி முயன்றீர்!

[தாக்கரு - (யாவராலும்) தாக்கமுடியாத. புயத்து - தோள்வலிமை வாய்ந்த. தலைமகன் - தலைவனான ராவணன். போம் பழி - போய்ச் சேரும் பழி.]

'உங்கள் சக்கரவர்த்திக்குத் தங்கை மூக்கோடு வந்த பழிபோதாதா?' என்று இடித்துக்கூறும் வார்த்தை ராட்சஸ உள்ளங்களில் உள்ளபடியே இடிபோல் விழுந்திருக்க வேண்டும்.

செட்டியாரா, வேளாளரா?
—ராவண 'பிரம்ம' குலம் இல்லையா?

இந்த நிலையில், 'ஓ வீரர்களே! வீரவாளும் கையுமாக ஓடும் உங்களைத் தான் கூப்பிடுகிறேன்' என்று, தூஷணன் தொடர்ந்து பேசுகிறான்.

'இவ்வளவு வேகமாய்ப் போகிறீர்களே, அங்கே போய் நீங்கள் அவசர மாய்ச் செய்யப் போவதென்ன? பிழைக்கும் வழிதான் என்னவோ? இனி மேல் தான் இந்தப் போர்த் தொழிலால் நீங்கள் ஜீவனம் செய்யப் போவ தில்லையே, பிழைக்கும் தொழில் வேறு வேண்டுமே — கடை போடப் போகிறீர்களா தராசும் கையுமாக? அதற்கு முதல் வேண்டாமா? ஓடும் போது ஆடுகிறதே கழுத்தில், அந்த முத்தாரம் முதலிய அணிகளை விற்று வியாபாரம் நடத்தப் போகிறீர்களா? இல்லை, உங்கள் வேல் வாள் முதலிய வற்றைக் கொண்டே உழுது விவசாயம் செய்யப் போகிறீர்களா?

இனிமேல் தான் உங்கள் வேலும் வாளும் போருக்குப் பயன்படப் போவதில்லையே, இவற்றையே கொழுவாகக் கொண்டு மண்ணை உழுது பார்க்கலாமே, — போர்க்களத்தில் "சேனை தழையாக்கிச் செங்குருதி நீராக்கி" உழுது தள்ளிய உங்கள் கைகளால்! கருவேலமரக் கலப்பைக் குத்திகளில் உங்கள் வேலையும் வாளையும் கொழுவாக மாட்டி மண்ணை உழுதுண்டு வாழ்வீர்களா? சொல்லி விட்டுப் போங்கள்'—என்று உபன்னியாச சிகரத்தை எட்டிப் பிடித்து அங்கு நின்று முழு ஆவேசத்தையும் கொட்டி விடுகிறான் அரக்கர்கள் மீது.

இந்த ஆவேச முடிவுரையைப் பாட்டிலே கேட்போம்:

ஆர வாழ்க்கையின் வணிகராய்
அமைதிரோ? அயில்வேல்
வீர வாள்கொடு வேல்மடுத்(து)
உழுதிரோ? வெறிப்போர்த்
தீர வாழ்க்கையில் தெவ்வரைச்
செருவிடைப் பறித்த
வீர வாட்கையிர்! எங்ஙனம்
வாழ்திரோ? விளம்பீர்.

[ஆரம் - முத்தாரம். அமைதிரோ - அமைவீர்களோ. அயில்வேல் - கூர்மையான வேலாயுதம். கொடு - கொண்டு. வேல் - கருவேல்; கருவேல மரக் கலப்பை; (இங்கே) கலப்பைக் குத்தி. மடுத்து - (நிலத்தில்) ஊன்ற வைத்து. உழுதிரோ - உழுவீர்களோ. வெறிப்போர் - வெறி கொண்டு நடத்தும் போரில். தீரவாழ்க்கையின் - தைரிய சம்பத்தோடு கூடிய வாழ்க்கையினால். செருவிடை - போரிலே. வீரவாள் கையிர் - வீர வாள்களைக் கையில் ஏந்தியவர்களே. எங்ஙனம் வாழ்திரோ - எப்படி வாழப்போகிறீர்களோ. விளம்பீர் - சொல்லுங்கள்.]

தோற்றோடும் அரக்கர்களை நோக்கி, 'இது நமது ஜாதிக்கு அடுக்குமோ? நீங்கள் செட்டியார்களா, வேளாளர்களா? — ஸாக்ஷாத் பிரம்ம குலமாகிய ராவண குலமல்லவா?' என்று ஜாதிகர்வத்தைத் தூண்டிவிடுகிறான் தூஷணன். சாதித் திமிரோ, இனத் திமிரோ, புயத் திமிரோ, பணத் திமிரோ, அதிகாரத் திமிரோ — எல்லாத் திமிரும் ராட்சஸ வர்க்கம்தானே? — ராவண ஜாதிதானே?

கடைசியாக, 'ஓடிப் போகிறவர்களே! வெட்கம் கெட்டவர்களே!' என்று ஏசி அழைக்காமல், 'வீரவாளைக் கையில் ஏந்தியவர்களே!' என்று அழைத்து வீர வெறியையும் தூண்டி ஜொலிக்கச் செய்கிறான்.

அந்த வீரவாள் முதலான ஆயுதங்களும் அவர்களுக்குச் சொந்தமல்லையாம். 'வலிமையே உரிமை என்ற வேட்டுவச் சட்டத்தின்படி போக

களத்திலே எதிரிகளான தேவர்களிடம் பறித்துக் கொண்ட ஆயுதங்களைத் தான் 'வீரவாள்' என்று குறிப்பிடுகிறான் தூஷணன். உழவையும் தொழிலையும் நிந்தனை செய்து பிறர் பொருளைப் பறித்து வாழும் சுரண்டல் வாழ்வே ராட்சஸப் பெருவாழ்வு என்பது தூஷண ஸித்தாந்தம்.

முடிவுரைக்கும் ஒரு முடிவுரை

இந்த முடிவுரையோடு தூஷணன் ராமனைத் தாக்கப்போகிறான். 'ஐயோ! நீங்கள் எவ்வாறு வாழ்வீர்களோ? சொல்லுங்கள்' என்று கேட்டுக் கொண்டே விடையை எதிர்பாராதவன் போல் ராமனை நோக்கிப் புறப்படுகிறான். இவனுடைய சொந்தப் படையும் அலையெறி கடல் போல் தொடர்ந்து போகிறது, ராமனை மூழ்கடிக்கப் போவதுபோல். இந்த நிலையிலும் கடைசியாகத் தூஷணன் மற்ற அரக்கர்களை யெல்லாம் ஒரு பார்வை பார்க்கிறான்.

பரிதாபமாய்ப் பார்க்கிறான். அவர்களுக்கோ மறுபடியும் ராமன்மேல் விழுந்து தாக்க வேண்டும் என்ற ஆத்திரம் அதிகரித்து விட்டது. அது தெரிந்தும்தெரியாதவன்போல் தூஷணன் தன் பரிதாபப் பார்வையை அவர்கள்மீது



வீசுகிறான். அவர்களைக் குறித்த அனுதாபமும் பரிதாபமும் கலந்த பார்வை அது. அப்படிப் பார்த்து, 'ஓ சகோதரர்களே ! என்னுடைய இந்த வில்லின் வலிமையைக் கொஞ்சம் நின்று பார்த்துத்தான் போகலாமே !' என்கிறான்.

இந்த நாவும் ஓய்ந்தது

அப்பால் தூஷணன் அவர்களோடு வேறொன்றும் பேசவில்லை, அவர்களைப் பார்க்கவுமில்லை. ராமனைத்தான் பார்க்கிறான், தாக்குகிறான். ராமனும் சித்தமாகத்தான் காத்துக் கொண்டிருந்தான், வரவேற்கிறான் தூஷணனையும் படைகளையும்.

என்று தானும்தன் எறிகடல்
சேனையும், 'இறைநீர்
நின்று காண்டிர்,என் நெடுஞ்சிலை
வலி !'யென நேராச்
சென்று தாக்கினன், தேவரும்
மருள்கொண்டு திகைத்தார் ;
'நன்று காத்தி!'என்(று) இராமனும்
எதிர்செல நடந்தான்.

[எறிகடல்சேனை - அலைஎறியும் கடல் போன்ற சேனை. இறை - சிறிதுபொழுது. காண்டிர் - காண்பீராக. சிலைவலி - வில்லின் வலிமை. நேராச் சென்று - நேராக எதிர்த்துப் போய். மருள் - மயக்கம். நன்று காத்தி - நன்றாக உன்னைக் காப்பாற்றிக் கொள்வாய். எதிர்செல நடந்தான் - எதிராக நடந்து சென்றான்.]

தூஷணனின் சொல்லம்புகள் வீராவேசத்தைப் பேடிகளுக்கும் மூட்டிவிடக் கூடியன. அரக்கர்களெல்லாம் போர்வெறி பொங்க ராமனை மொய்த்துவிட்டார்கள் என்று சொல்லவும் வேண்டுமா? மறுபடியும் ராம பாணங்கள் நெருப்பைக் கக்கிக்கொண்டு அங்குமிங்கும் பறக்கின்றன. ஆனால், இனி அரக்கர்கள் ஓடிப்போவதா யில்லை. சிறிதும் பின்வாங்காதபடி ஒரு நெருப்பு மதிலை நிறுத்திவிட்டன, தூஷண வீரனின் சொல்லாகிய சுடுசரங்கள்.


ராம பாணங்களுக்கு வசதிதான்; உருவி ஓடுகின்றன. இரத்த அருவியும் ஆறும் ஓடுகின்றன. சேனை சமுத்திரம் வர வர வற்றிப் போகிறது. தூஷணனுடைய இரதம் பிணக்குவியல் மீது இடறுகிறது, ஏறுகிறது, இறங்குகிறது. மலையும் சிகரமும் போல் தேரும் தானுமாய் வருகிறான் தூஷணன், யமன் எதிரே துணிந்து வரும் உயிர் போல. தூஷணனுடைய மூன்று அம்புகள் ராமனுடைய நெற்றியில் விளங்கிய வீர பட்டத்திலும் பட்டன. ராமன் சிறுநகை புரிந்து, சில பாணங்கள் செலுத்தத் தூஷணன் தேரும் வில்லும் கவசமும் இழந்து, கடைசியாகத் தலையும் இழந்தான். தூஷண நாவலனின் நாவும் ஓய்ந்து போயிற்று, சாசுவதமாக.

அது கண்ட அண்ணனான கான் ஜாக்கிரதையாக வந்து ராமனைத் தாக்கித் தந்திரமாகப் போர் செய்கிறான்.

கள்ளஅமர் மாயவினை
கல்வியின் விளைத்தான்.

[கள்ளஅமர் மாயவினை - கள்ளப் போராகிய மாயத் தொழில். கல்வியின் - (தான் கற்றிருந்த) போர்முறைக் கல்வியினால்.]

இந்த மாயப்போரின் முடிவை அடுத்த வாரம் காண்போம்.



265. அழுத கண்ணீரும் தொழுத கண்ணீரும்

தன் தம்பி வீரப்போர் செய்து வீழ்ச்சிபெற்றது கண்ட கரன், ஜாக்கிரதையாகவும் தந்திரமாகவும் தனக்குத் தெரிந்த மாயப்போர் முறைகளைக் கையாண்டு ராமனது மேனியை அம்பு மழையிலே மறையச் செய்தான். எனினும், அந்தப் போரில் கரன் தேர் இழந்து, அம்பறாத் தூணியிலிருந்து அம்புகளை ஓயாமல் வீசிக்கொண்டிருந்த தன் வலக்கையையும் இழந்து விட்டான்.

வலது கரம் இழந்தும் கரன் தன் போர்வெறியை இழக்கவில்லை :

> வலக்கை வீழ்தலும்,
> மற்றைக்கை யால்வெற்றி-
> உலக்கை, வானத்(து)
> உருமென ஓச்சினான்.

[வெற்றி உலக்கை - வெற்றியைத் தரவல்ல ஓர் உலக்கை. வானத்து உரும் என - வானத்திலிருந்து விழப்போகும் இடிபோல. ஓச்சினான் - உயரத் தூக்கியெடுத்து வீசினான்.]

ஒரு ரசாயன சாஸ்திரி வெடிமருந்துகளில் ஓர் ஆராய்ச்சி நடத்தும்போது வெடி வெடித்ததால் ஒரு கையை இழந்துவிட்டார். அந்த நிலையிலும் அவர், 'வேறொரு கை இருக்கிறதே இந்த ஆராய்ச்சியைத் தொடர்ந்து நடத்துவதற்கு!' என்று எக்களிப்புடன் கடவுளுக்கு நன்றி செலுத்தினார். இந்த வெறிக்குக் குறைந்ததில்லை கரனுடைய போர்வெறியும். ஆனால், அஞ்ஞானவெறி: ஓங்கிய உலக்கையால் மெய்ஞ்ஞான விளக்கையே தீர்த்துவிடலாமென்று நினைக்கிறானல்லவா?

இந்த அஞ்ஞானக் கொலை வெறியும் தீர்ந்துபோகிறது.

பரம்மு ருக்கிய
பாவத்தி னால்,வலக்
கரம்என னக்கரன்
கண்டம்உற் றனரோ!

[பரம் முருக்கிய - அதிகமாய் அழித்ததால் ஏற்பட்ட. வலக் காம் என - வலது கை அறபட்டதுபோல. கண்டம் உற்றான் - கழுத்தும் அறபட்டான்.]

கரனுக்கு மாயாபலம் அதிகம். தேக பலம் முதலான சக்திகளுக்கும் குறைவில்லை. வரப் பிரசாதங்களும் ஏராளமாகத்தான் இருந்தன, இந்த ராவணன் தம்பிக்கு,—அதாவது, தம்பி முறையில் இருந்த கரனுக்கு. ஆனால் அத்தனை வசதிகளையும் நல்வழிப் படுத்தாமல், உலகத்திற்குப் பயன் படுத்தாமல், உலகத்தை ஹிம்ஸிக்க உபயோகித்துக் கொண்டான். அந்தப் பாவம் தான் கரனை அழித்து விட்டதாம். வியாஜம் தான் ராமபாணம்! அஹிம்ஸா தர்மத்தை மீறி உலக மக்களுக்குக் கேடு சூழும் எத்தகைய பலமும் அழிந்து போகும் என்பதற்குக் கரனை ஓர் எச்சரிக்கையாகக் காட்டுகிறான் கவிஞன்.

பூமழையும், ஆசிமழையும், கண்ணீர் மழையும்

திசைகளை மறைத்துக் கவிந்த மூடுபனி போக்கிய சூரியனைப் போல, அனாயாசமாகப் பகையழித்து விளங்கும் பரிசுத்த மூர்த்தியை, இப்பொழுது தேவர்கள் செய்யும் ஜய கோஷத்திற்கும், பொழியும் பூமழைக்கு மிடையே கண்டு ஆனந்தியுங்கள்:

ஆர்த்தெ ழுந்தனர்,
ஆடினர், பாடினர்,
தூர்த்த னைந்தனர்
வானவர் தூய்மலர்:
தீர்த்த னும்பொலிந் —
தான்,கதி ரோன்திசை
போர்த்த மென்பனி
போக்கிய தென்னவே.

[ஆர்த்து — ஆரவாரம் செய்து. தூர்த்து — நிறையச் சொரிந்து. தூய் மலர் — பரிசுத்தமான பூக்கள். தீர்த்தன் — பரிசுத்தனான ராமன். கதிரோன் — சூரியன். போர்த்த — போர்வையிட்டு மறைத்தது போலத் தோன்றிய.]

ஜயராமனை முனிவர்கள் முறை முறையாக வந்து சூழ்ந்து மொய்த்துக் கொள்கிறார்கள். தேவர்கள் பூமழை பொழிந்து வாழ்த்தியதுபோல் முனிவர்கள் ஆசி மழை பொழிந்து ஆனந்தம் கொண்டாட வந்திருக்கிறார்கள். ஆனால் ராமனைக் கண்டதும், விஜய சௌந்தரியம் பார்த்ததும் அவர்கள் ஒன்றும் பேசவில்லை. ஆம், பேசத் தோன்றவில்லை. இதயம் ஆனந்த பூர்த்தியாக இருக்கும்போது வாயில் பேச்சு வருமோ?

ராமனுக்கும் அவர்களிடம் இனிய சிந்தைக்குக் குறைவு உண்டா? ராமனும் ஒன்றும் பேசவில்லை. அந்தப் பெரியோர்களுக்கு ஒரு நமஸ்


காரம் கூடச் செய்யாமல் போகிறான் வேகமாக. எங்கே? ஏன் இந்த அவசரம்?

முனிவர் வந்து
　　முறைமுறை மொய்ப்புற,
இனிய சிந்தை
　　இராமனும் ஏகினன்,
அனிக வெஞ்சமத்(து)
　　ஆருயிர் போகத்,தான்
தனிஇருந்த
　　உடல்அன்ன தையல்பால்.

[மொய்ப்புற — மொய்த்துச் சூழ. ஏகினன் — போனான். அனிகம் — சேனை. வெஞ்சமம் — கொடிய போர். உடல் அன்ன — உடல் போன்ற. தையல்பால் — பெண்ணிடம்; (இங்கே) சீதாதேவியிடம்.]

அரக்கர்-சேனைகளோடு பிராண நாயகன் போர் செய்யச் சென்ற போது, சீதை நிலைகுலைந்து சோர்ந்து போனாள் அல்லவா? தன் பிராணன் உடலை விட்டு வெளியே குதித்துப் போருக்குப் போனதாகவே எண்ணம். அந்த நிலையில் உயிரைப் பிரிந்த உடல் போலப் பர்ணசாலையில் தனியே இருந்தாள். அப்படிப்பட்ட உயிர் உடலை மீண்டும் வந்து அடைகிறது வெற்றிக்குப் பின்.

இந்தச் சந்திப்பிலும் வாய்ப் பேச்சு என்பதே யில்லை. தம்பி அண்ணன் பாதங்களில் விழுகிறான். சீதையும் அப்படியே செய்கிறாள். இருவரும் ஆனந்தக் கண்ணீர் வடிக்கிறார்கள்.



விண்ணில் நீங்கிய
வெய்யவர் மேனியின்
புண்ணின் நீரும்
பொடிகளும் போய்உக,
அண்ணல் வீரனைத்
தம்பியும் அன்னமும்
கண்ணின் நீரினில்
பாதம் கழுவினர்.

[விண்ணில் நீங்கிய — இறந்துபோன. வெய்யவர் — கொடியவர்கள். புண்ணின் நீர் — இரத்தம். பொடிகள்—தூசிகள். போய் உக — நீங்கி விடுமாறு. அண்ணல் வீரன் — பெருமையில் சிறந்த வீராமன். அன்னம் — (இங்கே) சீதை.]

தண்ணீர் கொண்டு பாதம் கழுவினர்களா? - கண்ணீர்கொண்டு கழுவினர்களாம். இவ்வளவு நன்றாக உணர்ச்சியை வெளியிடக்கூடிய பேச்சும் உண்டா? சீதையின் மாசிலா உள்ளத்தைச் சிறப்பாகக் காட்டுகிறது ' அன்னம் ' என்ற சொல்.

இந்த வெற்றிப் பேச்சோடு பேச்சாக மிச்சமான செய்தியையும் பேசித் தீர்த்துவிடுகிறான் கவிஞன் :

கங்குல் அன்ன
கரனைத் தழீஇ,நெடும்
பொங்கு வெங்குரு —
திப்புரண் டாள்அரோ !

[கங்குல் அன்ன — இருட்டை ஒத்த. வெங்குருதி — சூடான ரத்தத்திலே.]

இரத்தத்திலே இருள் விழுந்து கிடப்பது போலக் கிடந்த கரனைக் கட்டிப் புரண்டாள் சூர்ப்பணகை. உடனே எழுந்திருந்து ஒரு பெருஞ் சுழற் காற்றைப்போல இலங்கையை நோக்கி விரைகின்றாள். போகும் போதே பிலாக்கணம் பாடி அழுகிறாள் :

' ஆக்கி னேன்மனத்து
ஆசை,அவ் ஆசைஎன்
மூக்கி னோடு
முடிய முடிந்திலேன் ;
வாக்கி னல்உங்கள்
வாழ்வையும் நாளையும்
போக்கி னேன்கொடி —
யேன் ! 'என்று போயினள்.

[முடிந்திலேன் — நான் முடிந்தேனில்லை. வாக்கு — (இங்கே) வாய்க்கொழுப்பு. வாழ்வு — (இங்கே) சுகபோக வாழ்வு. நாள் — (இங்கே) அந்த வாழ்வை அனுபவிக்கும் வாழ்வு.]

இருந்தழவும் நேரமில்லையாம் இந்த அரக்கிக்கு. அவ்வளவு விசையாகப் போகிறாள் இலங்கைக்கு. இன்னும் வேலை பாக்கி இருக்கிறதே !

நடை மேலே பிலாக்கணம் பாடுவது இந்த அதிசயக் கவிதை வாயிலாக வந்து நம் காதில் ' முகாரி ' பாடுகிறது. அதே சமயம் ராமனுடைய பர்ணசாலையைச் சூழ்ந்துகொண்டு வான வீதியிலே வானவர் செய்யும் ஆர்ப்பாட்டம் ஜயமங்களம் பாடுகிறது.



266. தேவரும் தீண்டாதவரா?

எவ்வளவு இரைச்சல் போட்டுக் கொண்டு வந்தார்கள்! அந்த உயரம்—பருமனை தோற்றத்தைத்தான் என்னென்பது? அடடா, ஒவ்வொரு ராட்சஸனும் கிளைகளோடும் விழுதுகளோடும் கூடிய ஆலமரம் போல் இருந்தானே! அவர்களெல்லாம் இறந்ததே அதிசயம்: சூர்ப்பணகை மறந்ததை எத்தகைய அதிசயம் என்பது? எவ்வளவு சீக்கிரத்தில் மறந்துவிட்டாள்! காரணம் என்ன? அந்தப் போரில் அந்த அரக்கர்களைச் சங்கரிக்கும்போது பருத்து உயர்ந்தனவே ராமனுடைய வீரத்தோள்கள், அந்தத் தோள்களுக்கே திறைகொடுத்தாளாம் சூர்ப்பணகையாள் தன் உள்ளத்தை. பேராசை பொங்க நிமிர்ந்த தோள்கள் மீது இந்த அம்மாள் கொண்ட பேராசைதான், இறந்த ராட்சஸ சகோதரர்களையும் மறந்ததற்குக் காரணம்.

அலைகடலும் ஆசைக்கடலும்

இந்த நிலையில் இலங்கைக்கு ஓடிப் போகிறாள். ஆம், கடல் சூழ்ந்த இலங்கைக்கு, - அலைகடல் பெரியதோர் இயற்கை - அகழியாகச் சூழ்ந்திருக்கிறதே அந்த வலிமைவாய்ந்த ராட்சஸ ராஜதானிக்குத்தான். சூர்ப்பணகையின் உள்ளத்திலும் ஓர் அலைகடல் கொந்தளித்த வண்ணமாயிருக்கிறது. அந்தக் கடலையும் அதன் பேராசை - அலைகளுடன் காட்டுவது போல் அமைந்திருக்கிறது பாட்டு:

இரைக்குநெடும் பனை அரக்கர்
  இறந்ததனை மறந்தனள்,போர்
  இராமன் துங்க
வரைப்புயத்தின் இடைக்கிடந்த
  பேராசை மனம்கவற்ற
  ஆற்றா ளாகி,



திரைப்பரவைப் பேரகழித்
    திண்ணகரில் கடிதோடிச்
    'சீதை தன்மை
உரைப்பென்'எனச் சூர்ப்பணகை
    வர,இருந்தான் இருந்தபரி(சு)
    உரைத்தும் மன்றோ.

[இரைக்கும் - இரைச்சல் போடுகிற. நெடும்பணை - உயர்ந்து பருத்த. போர் இராமன் — அந்தப் போரில் வெற்றி பெற்ற ராமன். துங்க வரைப் புயம் - உயர்ந்த மலைபோன்ற வீரத் தோள்கள். மனம் கவற்ற - மனத்தைக் கவலைக்குள்ளாக்க. ஆற்றளாகி - பொறுக்க முடியாதவளாய். திரைப்

பரவை - அலைகளோடு கூடிய சமுத்திரம். திண் நகர் - வலிய நகரமாகிய இலங்கை. கடிது ஓடி - விரைவாக ஓடி. உரைப்பென் - (ராவணனுக்கு) உரைப்பேன். வர - வந்துகொண்டிருக்க. இருந்தான் இருந்த பரிசு - (அந்த இலங்கையிலே) ராவணன் கொலு வீற்றிருந்த நிலைமை. உரைத்தும் - சொல்வோம்.]

சூர்ப்பணகை சூழ்ச்சி

அரக்கர்களை வதைத்த ராமனுடைய அந்த வீரமே காதலை மறுபடியும் தூண்ட, 'அதற்கு இனிமேல் செய்வதென்ன?' என்று ஆலோசனை செய்து கொண்டே போகிறாள் சூர்ப்பணகை. நடைமேலே பிலாக்கணம்; திடீரென்று சோகம் காதலில் மறைந்ததும் நடை ஓட்டமாக, அந்த ஓட்டத்திலேயே ஆலோசனை. அந்த ஆலோசனையை மிகவும் சுருக்கமாகச் 'சீதை தன்மை உரைப்பென்' எனச் சூர்ப்பணகையின் தனிமொழியாகக் காட்டுகிறான் கவிஞன். இந்த அரக்கியின் உள்ளத்திலே விரைந்தோடும் சிந்தனை - ஓட்டங்கள், சுழிக்கும் சூழ்ச்சிகள் ஆகியவை, நம் ஊகத்திற்கே விடப்படுகின்றன.



ராவணனிடம் சீதையின் அழகை எடுத்துரைத்துப் பேராசையை மூட்டிவிட்டால், 'தன் பேராசையும் நிறைவேறும்' என்பது சூர்ப்பணகையின் நினைப்பு. சீதையை ராவணன் கவர்ந்து சென்றால் தன்னை அங்க பங்கப் படுத்தியவர்களுக்கு மான பங்கமும் ஏற்படும். அப்படிப் பழி வாங்குவதோடு, ராமனையும் தான் அடையக்கூடும், சீதை குறுக்கே நிற்காத நிலையில்:—இது சூர்ப்பணகை சூழ்ச்சி.

இப்படிச் சூர்ப்பணகையைச் சூழ்ச்சியுடன் இலங்கையை நோக்கி ஓட விட்டுக் கவிதை பளிச்சென்று பாய்ந்து விடுகிறது ராவண தர்பாருக்கு.

என்ன கட்டுக்காவல்! என்ன விசித்திரமான வேலைப்பாடு, அதி சூட்சும நிர்மாண சக்தி! எந்தச் சிற்ப மேதாவியின் புத்தி விசேஷங்களை யெல்லாம் புலப்படுத்துகிறது மண்டபம்! இந்த ஒப்பற்ற இரத்தின கசிதமான மண்டபத்திலே அரசு வீற்றிருப்பதால் தான் அவனுக்கு இவ்வளவு பொலிவு ஏற்பட்டிருக்கிறதா? அவன் கொலு விருப்பதால் தான் மண்டபத்திற்கு இந்தப் பொலிவா? அப்பேர்ப்பட்ட பிரமிப்பு இப்போது உண்டாகிறது. ஆனால் சக்கரவர்த்தியின் மாட்சிமை தங்கிய சபா மண்டபமும் புதியதோர் அழகு பெறுகின்றது என விரைவில் தெரிந்து தெளிவடைகிறோம்.

கொலுமாட்சி

ஆஹா, என்ன காட்சியைக் கண்முன்பு பார்க்கிறோம்? அகோரமான நெடிய பெரிய வடிவத்திலே வயிரக்குன்றுகள் போல் வீரத்தோள்கள். தோள்களின் மேல் உதய சூரியன் போல் குண்டலங்கள். நட்சத்திரங்கள் போலவும் கிரகங்கள் போலவும் முத்துமாலை நவரத்தின மாலைகள். மகா கம்பீரமான வணங்கா முடிகளின் வரிசை. அந்த முடிகளைப் பார்க்க நம் இரண்டு கண்கள் போதுமா? பார்க்கவே கூசும் கண்களல்லவா?

சத்தம்கேட்டு, அடிகளை நோக்குவோம். எத்தனையோ ராஜாக்கள், அரக்கர் தலைவர்கள், காலில் விழுந்த வண்ணமா யிருக்கிறார்களல்லவா? அந்த இரத்தின கிரீடங்களோடு உரசித் தேய்ந்து தேய்ந்து புதிய ஒளி பெற்றுப் பாதத்திலே கிடந்து சப்திக்கும் வீரக்கழலைப் பார்ப்போம்:

ஆய்வரும் பெருவலி
அரக்கர் ஆதியோர்
நாயகர் நளிர்மணி
மகுடம் நண்ணலால்,
தேய்வுறத் தேய்வுறப்
பெயர்ந்து செஞ்சுடர்
ஆய்மணிப் பொலன்கழல்
அடிநின்(று) ஆர்ப்பவே.

[ஆய்வரும் பெருவலி - ஆராய்வதற்கு அருமையான பெரும்பலமுள்ள. அரக்கர் ஆதியோர் நாயகர் - அரக்கர் முதலானவர்களுடைய தலைவர்கள். நளிர்மணி மகுடம் - பெருமைக்கு அறிகுறியான இரத்தின கிரீடங்கள். நண்ணலால் - (வணங்கும்போது) வந்து பொருந்துவதால். பெயர்ந்து - வேறுபட்டு. செஞ்சுடர் ஆய்மணிப் பொலன்கழல் - சிவந்த ஒளியுள்ள சிறந்த இரத்தினங்கள் பதித்த, பொன்னால் செய்த, வீரக்கழல். அடிநின்று - பாதத்திலே கிடந்து. ஆர்ப்ப - ஆரவாரம் செய்ய.]

பாத பூசை

அரசர்கள் ஓயாது ஒழியாது தொண்டு செலுத்தும் பாதகாணிக்கைகளின் குவியல்களுடன், சிறப்பாக நடைபெறும் பாதபூஜைகளையும் பார்க்கிறோம்:

தேவரும் அவுணரும்
முதலி னோர்திசை
தூவிய நறுமலர்க்
குப்பை துன்னவே!

[அவுணர் - அசுரர். திசைதூவிய - திசைநோக்கித் தூவிய. குப்பை - குவியல். துன்ன - நெருங்க.]

இந்தத் தேவர்களும் அசுரர்களும் ராட்சஸ ராஜேந்திரன்-பிரதாப லங்கேச்வரன் - வீற்றிருக்கும் திசைநோக்கி மலர் தூவுகிறார்கள். மரியாதையாகத் தூரத்தில் இருந்தபடியேதான். நெருங்கிப் பாதபூஜை செய்யும் உரிமையும் பெறாதவர்கள்! ஏன்? நெருங்கத் தகாதவர்கள்! இப்படிச் சக்கரவர்த்தியைப் பிரத்தியட்ச தெய்வமாக வழிபட்டுப் பாதபூஜை செய்வதில் அடிமைத் தேவர்கள் அரக்கர்களோடும் அசுரர்களோடும் போட்டி போடுகிறார்களாம்.



267. சில தர்பார்க் காட்சிகள்

சக்கரவர்த்தி – தரிசனத்திற்கு வரலாமென்று உத்தரவு கிடைத்தவுடன் அரசர்களெல்லாம் வந்து வந்து காலில் விழுந்து விழுந்து ராவணேசுவரனுடைய வீரக்கழலைத் தேய்த்து விட்டார்கள். ‘பாத காணிக்கை சமர்ப்பிக்கலாம், பாத பூஜை செய்யலாம்’ என்று கட்டளை கிடைத்தவுடன் ராவண பக்தர்கள் பாதத்திலே தூவிய புஷ்பங்களும் ஸ்வர்ண புஷ்பங்களும் குவிந்து விட்டன குப்பை மேடுகள் போலே.

வித்தியாதரப் பொம்மைகள்

சரணாகதி வைபவமும் பாதபூஜை விழாவும் முடிந்து ‘மலர்க் குப்பை’களும் பொற்குவியல்களும் ஒதுக்கப்பட்டதும், வேறொரு காட்சி. ஒதுக்கப்பட்ட தேவ வகுப்பினரில் நெருங்கவும் தகாதவர்களாய் விலகி நின்று திசை நோக்கி மலர் தூவிப் பாத பூஜை செய்தவர்கள் முதுகு காட்டாது பின்னேறிப் போன பின், தரிசனத்திற்கு வந்திருக்கும் வித்தியாதர வேந்தர்களின் கும்பல் தெரிகிறது. இவர்கள் நெருங்கத் தகாதவர்களில்லை, எனினும் தீண்டத் தகாதவர்களே. ஆனால் கும்பிடத் தகுதியுள்ளவர்கள். ஆனால்...ஆனால், எஜமான் கடைக்கண் விழவேணுமே அடிமைகள்மீது :

‘இன்னபோ(து) இவ்வழி
நோக்கும்’ என்பதை
உன்னலர், கரதலம்
சுமந்த உச்சியர்,
மின்அவிர் மணிமுடி
விஞ்சை வேந்தர்கள்,
துன்னினர், முறைமுறை
துறையில் சுற்றவே.

[உன்னலர் – ஆலோசித்து அறிந்துகொள்ள முடியாதவர்களாய். கரதலம் – கைகள். மின் அவிர் – பளிச்சுப் பளிச்சென்று மின்னல் வீசுவதுபோல் ஒளி வீசுகிற. மணிமுடி – இரத்தினங்கள் இழைத்த கிரீடங்கள்.

விஞ்சை வேந்தர்கள் — வித்தியாதர அரசர்கள். துன்னினர் — நெருங்கியவர்களாய். துறையில் — (சபா மண்டபத்திலே வித்தியாதர அரசர்களுக்கென்று ஏற்பட்டிருந்த) இடங்களில்.]

ராவணேசுவரன் இன்ன சமயத்தில் இன்ன பக்கத்தை நோக்குவான் என்பதை எப்படி அறிவார்கள், பாவம்! தங்களை அவன் பார்க்கும் சமயத்தில் அஞ்சலி செய்த வண்ணம் பக்தியைப் பாதார விந்தங்களில் பூட்டிவிட வேண்டும் என்பது நோக்கம். தர்பாருக்கு வந்ததுமே தலை மேல் கை தூக்கிப் பார்த்தார்கள். சக்கரவர்த்தி கவனிக்க வில்லை. ஒரு தரம், இரண்டு தரம், மூன்று தரம் — இப்படி எத்தனையோ தரம் கையைத் தூக்குவதும் இறக்குவதுமா யிருந்தார்கள். இந்தத் தேகாப்பியாசமும் வீணாகப் போய் விட்டது. மன்னர்பிரான் அந்தத் திசையையே பார்க்கவில்லை. பார்வை இந்தப் பக்கத்தில் விழும்போது பளிச்சென்று தலைமேல் சேர்த்து விடுவதற்குத் தயாராகத் தங்கள் கைகளை வெகு நேரம் உயர்த்தி வைத்துக் கொண்டிருந்தார்கள். என்ன துரதிர்ஷ்டம்! அந்தப் பார்வை இந்தப் பக்கம் திரும்பவேயில்லை. கைவலி பொறுக்க முடியவில்லை. ராஜபக்திக்குத்தான் எவ்வளவு சோதனை, என்ன புத்தி மூட்டு!

ஆ! இப்பொழுது திடீரென்று வெளிப்படுகிறது புத்தி தீட்சணியம். ஒரு தந்திரம் கண்டு பிடிக்கிறார்கள். அதாவது, எப்பொழுதும் அஞ்சலி பந்தமாய்த் தங்கள் கைகளைத் தலை மேல் சுமந்த வண்ணமாகவே இருக்கிறார்கள். இதனால் வலி யெடுத்த கைகளும் இளைப்பாறுகின்றன. சக்காவர்த்தியும் எப்பொழுது வேண்டுமானாலும் இந்த வணக்கத்தைப் பார்த்துத் திருப்தி அடையக் கூடுமல்லவா?

இப்பேர்ப்பட்ட அபூர்வ மூளையுள்ள ராஜபக்த சிகாமணிகளுக்கு அப்படியே கைகளைச் சேர்த்து உச்சந்தலைமேல் இயற்கையாக ஒட்டியிருக்கும்படி படைத்து விடாமல், சாமானியர்களின் கைகளைப்போல் தோளிலிருந்து இரண்டு பக்கங்களிலும் தொங்கும்படி சிருஷ்டி செய்தது சிருஷ்டி கர்த்தாவின் புத்தித் தாழ்ச்சிதானே! 'சக்காவர்த்தி இத்தப் பக்கத்தைப் பார்க்க நேரும் சமயம் நாம் வணங்காமலிருந்தால், தலை போய்விடுமே!' என்ற பயம்தான் அந்தத் தலைக்குள் இருந்த மூளையை அவ்வளவு தீவிரமாக வேலை செய்யும்படி தூண்டியிருக்க வேண்டும்!



'இவர்கள் தலைமேல் சுமந்த கையினர்' என்று காட்டும் கவிஞர், அந்தத் தலைகளுக்கும் கைகளுக்கும் இடையில் உள்ள கிரீடங்களையும் சுட்டிக் காட்டுகிறார், 'மின்அவிர் மணிமுடி' யென்று. இந்த இரத்தின கிரீடங்களின் மேல் ஏறியிருக்கும் கைகளைத்தான் 'கரதலம்' என்று தேவ பாஷையில் பாராட்டுகிறார். கிரீடங்களிலுள்ள இரத்தினங்கள் பளிச்சுப் பளிச்சென்று மின்வெட்டுகின்றன. இந்த மின்வெட்டு, கிரீடங்கள் சுமக்கும் கைகளையும், கிரீடங்களைச் சுமக்கும் தலைகளையும் பார்த்துச் சிரிக்கிறதா, என்ன ?

உயிரினும் இனிய சுதந்திரம் இழந்து, மானம் என்னும் நல்லணி துறந்து சிற்றடிமைப்பட்டுச் சிற்றரசர்களாகி விட்ட இந்த வித்தியாதர வேந்தர்கள் இரத்தின கிரீடங்களாலும் விலை உயர்ந்த ஆடையாபரணங்களாலும் அணிகள் வேய்ந்த பிணங்கள்போலத் தங்களை அலங்கரித்துக் கொண்டு வரிசைக் கிரமமாக நிற்கிறார்கள் ஒரு புறம். இனி இந்த வித்தியாதரப் பொம்மை யரசர்களைவிட்டு வேறு பக்கமாக நம் கவனத்தைத் திருப்புவோம்.

கின்னர பக்தி

அதோ கின்னர அரசர்கள் — எவ்வளவோ காலமாக ராவணேசுவரனுக்குத் தொண்டு செய்யும் அடிமைகள். அவர்களுடைய பயபக்தியைப் பாருங்கள் :

அன்னவன் அமைச்சரை
நோக்கி ஆண்(டு)ஒரு



நன்மொழி பகரினும்,
நடுங்கும் சிந்தையர்,
'என்னைகொல் பணி?' என
இறைஞ்சு கின்றனர்,
கின்னரர், பெரும்பயம்
கிடந்த நெஞ்சினர்.

[அன்னவன் — அந்த ராவணன். ஆண்டு — அங்கே; அப்பொழுது. பகரினும் — சொன்னாலும். என்னை கொல் பணி — என்ன உத்தரவோ.]

சித்தர் போட்டி

கின்னரர் பக்திக்குச் சித்தர் பக்தி தோற்குமா? இவர்கள் கின்னரர் போல் நீண்ட கால அடிமைகள் அல்லர். சமீபத்தில் சுதந்திரம் இழந்தவர்கள். காடுகளில் தன்னிச்சை கொண்டு திரியும் ஆண் சிங்கம் போலக் கம்பீரமாகச் சுயேச்சை வாழ்வு வாழ்ந்தார்கள். ஆனால் அது இப்போது கதையாய்க் கனவாய்க் கழிந்து விட்டது. இந்தச் சித்த ராஜாக்கள் கின்னர மன்னரையும் விஞ்சை வேந்தரையும் தோற்கடிக்கிறார்கள் ராவண பக்தியிலே:

மங்கையர் திறந்(து)ஒரு
மாற்றம் கூறினும்,
தங்களை யாம்எனத்
தாழும் சென்னியர்,
அங்கையும் உள்ளமும்
குவிந்த ஆக்கையர்,
சிங்கஏ றெனத்திறல்
சித்தர் சேரவே.

[மங்கையர் திறத்து - (இங்கே) பணிப் பெண்களிடம். மாற்றம் — வார்த்தை. சென்னி — தலை. அங்கை — அகங்கை. ஆக்கை - உடம்பு. சிங்க ஏறு - ஆண் சிங்கம்.]

தாழ்த்தும் சென்னியர் அல்ல, 'தாழும் சென்னியர்'—அவர்கள் நினைத்துத் தாழ்த்த வில்லையாம்; தலைகள் தாமாகவே தாழ்கின்றனவாம், ராவணன் அடிகளை நோக்கி. 'அங்கையும் உள்ளமும் குவிந்த ஆக்கையர்'— Slave-Mentality என்று காந்தியடிகள் குறிப்பிட்ட அடிமை மனப்பான்மையை இதற்கு மேல் நயம்படத் திறம் படச் சொல்ல முடியுமா?

பயபக்தி விசுவாசங்களில் சித்தர்களையும் வென்று விடுகிறார்கள் நாக ராஜாக்கள். இவர்கள் நமனைக் கண்ட நரக வாசிகள் போல் நடுங்குகிறார்களாம்:

நரகின ராம்என
நடுங்கும் நாவினர்!

வாய்விட்டு அலறவும், உளறவும் கூட இயலாது நடுங்குகிறது நாக்கு! 'இத்தகைய நரக வாழ்க்கையா அடிமை வாழ்க்கை?' என்ற உணர்ச்சியுடன் திரும்புகிறோம் தர்பார் மண்டபத்திலிருந்து.

*   *   *   *

இப்படியெல்லாம் ராஜ பக்தர் கூத்தாடுவது கண்டு திரும்பும்போதே ஒரு நடனமும் கண்டு வருகிறோம். உயிர் பெய்த சித்திரம் போலத்தான் ஆடுகிறாள் ஊர்வசி. ஆனால் நடுக்கம் தெய்வக் கலையையும் ஒடுக்கி விடவில்லையா?



268. மேல் கீழான புரட்சி

தொண்டு பட்டொழுகும் தேவ சமுதாயத்தின் ராஜ பக்தியையும், தேவ சத்துருவான ராவணேசுவரனது வீரத் தோள்களின் விஜயத்தையும் ஒன்றுபட இசைத்துத் தேவகானத்தில் அமைத்துப் பாடுகிறாரே,— ஒரு குருமூர்த்தி போலவும் தோன்றுகிறாரே — யார் அவர்? நர ஸ்துதியே கூடாதென்பர்; ராட்சஸ ஸ்துதியல்லவா செய்கிறார் மாமுனிவர்? கந்தர்வ குருவாகிய தும்புரு அவர். 'தும்புரு, நாரதர்' என்று இசைக்கு இருவராக இசைத்துப் பேசுகிறார்களே, அந்தத் தும்புருவேதான். அப்படி அவர் என்னதான் பாடுகிறாரோ?—சற்றுச் சத்தம் போடாமல் கேட்போம்.

ராஜ வாழ்த்து

'திக்கொடு திக்—அந்தங்களையும் ஜயித்த ராவணேசுவரன், கைலயங் கிரியைப் பெயர்த்து மேல் கீழாக்கி அதன்மேல் வீற்றிருந்த தேவனுக்கும் முதுகிலே மண்காட்டி வசைகாட்டினான். தேவலோகமெல்லாம் அசைந்து குலுங்கத் தேவேந்திரனையும் வென்று வலி யழித்தான். அத்தகைய தோள்வலி வாழ்க' என்று ராட்சஸ சர்வாதிகாரியின் வீரப் பெரும் புகழைத் தும்புரு அமுதகீதமாகப் பொழிகின்றார்:

திசையுறு கரிகளைச்
　　செற்றுத், தேவனும்
வசையுறக் கைலையை
　　மறித்து, வானெலாம்
அசையுறப் புரந்தரன்
　　அடர்த்த தோள்களின்
இசையினைத் தும்புரு
　　இசையின் ஏத்தவே.

[உறு — பொருந்திய. கரி — யானை. செற்று—வலியடக்கி வென்று. மறித்து—மேல்கீழாக்கி. புரந்தரன் — இந்திரன். அடர்த்த — தாக்கி வருத்திய. இசை — 1. புகழ் ; 2. கீதம்.]



சிலர் வாய்விட்டுக் கதறவும் அஞ்சி நடுங்கிக்கொண்டிருக்கும் தர்பாரில் கந்தர்வ கானத்திலே ராஜ வாழ்த்துப் பாடுகிறார் ஸாக்ஷாத் தும்புரு மஹரிஷி. தொழுகையும் பாட்டு, அழுகையும் பாட்டாய் வருகிறதல்லவா? ஆனால் அடிமைத் தேவர்களின் பரிதாப அழுகை எப்படித்தான் தும்புரு கானமாக இசைந்து விட்டதோ? எல்லாம் சர்வாதிகாரத்தின் சர்வ வல்லமை தான்!

இனி நாரத கானமும் சிறிது கேட்போம். காந்தர்வ வேதத்தில் கரைகண்டவரல்லவா இந்தத் தேவரிஷி? தும்புரு வீணையான கலாவதி ராஜவாழ்த்தில் லயித்துப் போக, நாரத வீணையான மகதீ நாதகீத வேதத்தைப் பொழிகின்றது ராவணன் செவிகளில் :

சேணுயர் நெறிமுறை
திறம்பல் இன்றியே
பாணிகள் பணிசெயப்,
பழுநில் பண்ணிடை
வீணையின் நரம்பிடை
விளைத்த தேமறை,
வாணியின், நாரதன்
செவியின் வார்க்கவே.

[சேண் உயர் - மிகவும் பிரசித்தமாய் வழங்குகின்ற. நெறிமுறை - சங்கீத நெறிக்கு உரிய முறை. திறம்பல் - தவறுதல். பாணிகள் பணி செய - கைகள் (ஸ்வர ஸ்தானங்களில்) தொண்டாற்ற. நரம்பிடை - தந்திகளிலே. தேமறை - தேனொகிய காந்தர்வ வேதம். வாணியின் - ஸரஸ்வதி போல்.]

தர்பாரில் டவாலிச் சேவகர்

ஆத்ம ஞானியான நாரத பகவானும் இப்படி வீணாகானம் செய்து 'காக்காய் பிடிக்கும்' தர்பாரில், சமுத்திர ராஜாவும் காற்றுத் தேவன் முத

லானவர்களும் அடிமை வேலைகள் செய்கிறார்கள் என்று சொல்லவா வேண்டும்? இந்தத் தொண்டுகளைப் பார்த்துக் கொண்டே வரும்போது நமது கவனம் சிங்காதனத்திற்கு முன் இரு புறமும் பொற் பிரம்பு பிடித்து நிற்கும் இரண்டு தலைமைச் சேவகர்கள் மீது செல்லுகிறது. கூட்டம் அதிகமாக அங்கு வந்து நெருங்கி விடாதபடி அவர்கள் அவ்வளவு ஜாக்கிரதையாக நிற்கிறார்கள். பொற்பிரம்பை அங்குமிங்கும் மின்னல் பிறக்க வீசிக் கூட்டத்தை மரியாதையான தூரத்தில் நிறுத்தி வைக்கிறார்கள். ராஜ பக்திப் பெருக்கால் சிலர் நெருங்கி வந்ததும், படீர் படீரென்று அடிகள் முகத்திலும் முதுகிலும் விழுகின்றன. அடியார்களோ அடிகளைப் பிரசாதமாக ஏற்றுக் கொள்கிறார்கள். முகத்தையும் முதுகையும் தடவிக் கொண்டு 'ஆனந்தக் கண்ணீர்' பொழிகின்றார்! பொற்பிரம்பின் அடிகளல்லவா? குட்டுப்பட்டாலும் மோதிரக்கையால் குட்டுப்பட வேணுமே!



இனி அடியார்களை விட்டுச் சேவகர்களை நன்றாகக் கவனித்துப் பார்ப்போம்:

மின்னுடை வேத்திரக்
  கையர், மெய்புகத்
துன்னெடுங் கஞ்சுகத்
  துகிலர், சோர்விலர்,
பொன்னொடு வெள்ளியும்,
  புரந்த ராதியர்க்(கு)

இன்னியல் முறைமுறை
இருக்கை ஈயவே!

[மின்உடை — மின்னலை உடைய; மின்னல் வீசுவது போல் வீசிக் கொண்டிருக்கும். வேத்திரம் — பொற்பிரம்பு. மெய் புக — உடம்பு முழுவதும் புகுந்து மறையும்படி. துன் — நெருங்கிய. நெடுங் கஞ்சுகத் துகிலர் — (பட்டுத்துணியால் தைத்த) நீண்ட சொக்காய்களை அணிந்தவர்கள். சோர்விலர் — (முகத்திலே) சோர்வுக் குறிகள் இல்லாதவர்கள். பொன் — பொன்னிற மேனியரான பிருகஸ்பதி. வெள்ளி — வெண்ணிற மேனியரான சுக்கிராசாரியார். புரந்தர ஆதியர் - இந்திரன் ஆதியோர். இன் இயல் - இனிய இயல்பு. ஈய - கொடுக்க.]

உடம்பு முழுவதும் மறையும்படி நீண்ட பட்டுச் சட்டைகள் தரித்திருக்கின்றனர். 'தொள தொள' வென்று தொங்காமல் சட்டைகள் உடம்போடு உடம்பாய் ஒட்டிப் பொருந்தி யிருக்கின்றன. ஓடியாடி வேலை செய்ய வசதியாக இருக்க வேணுமே?

சேவகர்களின் முகத்தைத்தான் பாருங்கள். சோர்வுக் குறி சிறிதும் காணப்படவில்லையே, உற்றுப் பாருங்கள். இவ்வளவு உத்ஸாகமாய்ச் சேவகத் தொழில் செய்யும் ஆசாமிகள் பிராம்மண சிரேஷ்டர்கள்: என்ன விநோதம்! சாதாரணமான பிராம்மணர்களா? புரோகித சிரேஷ்டர்கள்; தேவ புரோகிதரான பிருகஸ்பதி பகவானும் அசுர புரோகிதரான சுக்கிராசாரிய ஸ்வாமியும்தான்—என்ன விபரீதம்! உடல் வளையாத புரோகிதத் தொழிலைவிட்டு இந்தச் சேவகத் தொழிலுக்கு வந்த காரணம்தான் என்ன?

சரி, சரி; ராவணேசுவரனே வேள்விகளை விலக்கிவிட்டான். புரோகிதர்களுக்குப் பிழைப்பில்லை. மகா புத்திசாலிகளல்லவா? எந்தப் புத்திசாலியையும் 'பிருகஸ்பதியோ?' என்று கேட்கிறோம். அந்தப் பிருகஸ்பதிக்கும் சுக்கிராசாரியருக்கும் எந்த நிலையிலும் பிழைக்கும் வழி தெரியாதா? சமயோசித புத்தி இல்லையா? வைதிக ஆடைகளைக் களைந்து இப்படி முழுச்சொக்காய் அணிந்து தர்பாருக்கு வந்துவிட்டார்கள், வில்லைச் சேவகர்களாக! இப்போது பிரம்பைக் கீழே வைத்துவிட்டு என்ன செய்கின்றனர் பாருங்கள்:

பொன்னொடு வெள்ளியும்,
புரந்த ராதியர்க்(கு)
இன்னியல் முறைமுறை
இருக்கை ஈயவே!

இந்திரன் முதலானவர்களுக்கு அவரவர் அந்தஸ்திற்குத் தகுந்தபடி ஆசனம் கொண்டுபோய்ப் போடுகின்றனர்கள். இந்திராதி தேவர்களால் ஆசனம் தந்து உபசரிக்கப்படுவதற்கு உரிய ஆசாரிய மூர்த்திகள் இப்போது இவ்விதமாகத் தலைகீழ்ப் பாடம் படிக்கின்றனர்கள்! ராவண ஸர்வாதிகாரத்திலே இப்படி எல்லாம் மேல் கீழாய்ப் புரண்டு கிடக்கிறது!

தேவாசுர ஆசாரிய ஸ்வாமிகளே! நீங்கள் உங்களுடைய புதிய உத்தியோகத்தை எவ்வளவு இயற்கையாகவும் இனிமையாகவும், இந்தத் தொழிலுக்கென்றே பிறந்தவர்களைப் போலப் பார்த்து வருகிறீர்கள்:

இன்இயல் முறைமுறை
இருக்கை சயவே!

இந்த வேலைக்குத் தான் எத்தனை விண்ணப்பங்கள் போட்டு எவ்வளவு முயற்சி செய்தீர்களோ ?

*   *   *

இப்படி உலகத்தை யெல்லாம் மேல் கீழாய்க் கீழ்மேலாய்ப் புரட்டி, வெள்ளியங்கிரியையும் புரட்டிவிட்டதாகப் புரளி பண்ணிக் கொண்டு மகோன்னத நிலையில் இருக்கிறது ராவண மகாராஜ்யம்.

இருந்தனன், உலகங்கள்
இரண்டும் ஒன்றும், தன்
அருந்தவம் உடைமையின்,
அளவில் ஆற்றலின்,
பொருந்திய இராவணன்,
புருவக் கார்முகக்
கருந்தடங் கண்ணியர்
கண்ணின் வெள்ளத்தே !

[உலகங்கள் இரண்டும் ஒன்றும் - மூன்று உலகங்களும். உடைமையின் — உடைமையால்; உடையவனாக இருப்பதால். அளவில் ஆற்றலின் — அளவில்லாத வலிமையால். புருவக் கார்முகம் — புருவங்களாகிய விற்கள். கருந்தடங்கண்ணியர் — கரிய பெரிய கண்களையுடையவர்கள்.]

உலக மெல்லாம் காலடியில் பொருந்திக் கிடக்க, பெண்களின் கண்ணின் வெள்ளம் அலைமோத இறுமாந்து கொலுவிருக்கின்றான் பிரதாப லங்கேச்வரன். இந்த மகோன்னத நிலையில்தான் சூர்ப்பணகை வருகிறாள் மூக்கறைச்சியாக !

மூன்றுல(கு) உடையவன்
தங்கை மூக்கிலள் !

என்று ஒரு நாள் அதிசயமாகக் கண்டு பிடிக்கிறது இலங்கைமாநகரம்.



269. போகத்தினிடையே அழுகுரல்

வடக்கே தண்டகாரணியத்திலிருந்து தென்னிலங்கைக்கு வந்த சூர்ப்பணகை தலைவிரி கோலமாக வடதிசை வாசலில் காணப்பட்டாள். இவளைக் கண்ட அரக்கியர்கள் வயிற்றில் அடித்துக் கொண்டார்கள்; ஏங்கி யேங்கி அழுதார்கள். அரக்கர்களும் திடீரென்று இந்த நிலையில் இவளைப் பார்த்ததும் திகைத்துத் திக்பிரமை கொண்டார்கள் ஒரு கணம். அடுத்த கணமே கையோடு கை புடைத்து இடிக் குரலில் அலறினார்கள். பிறகு தீப் பொறி பறக்கக் கண்களை உருட்டி விழித்த வண்ணம் உதட்டைக் கடித்து நின்றார்கள்.

குற்றவாளி யார்? (ஆராய்ச்சி)

மூன்றுலகுடையவன் தங்கை யென்று தெரிந்தும் இப்படிச் செய்யத் துணிபவரும் உண்டோ? ஆகவே இந்த மூக்கறுப்பு விஷயமாகச் சில ராட்சஸ மூளைகள் அபூர்வ ஆராய்ச்சி செய்யத் தொடங்கின :

‘என்னையே! இராவணன்
தங்கை என்றபின்,
“அன்னையே!” என்(று) அடி
வணங்கல் அன்றியே,
உன்னவே ஒண்ணுமோ
ஒருவ ரால்? இவள்
தன்னையே அரிந்தனள்
தான்!’ என்றார்சிலர்.

[என்னையே — என்ன ஆச்சரியம். உன்னவே ஒண்ணுமோ — (இவளுக்குத் தீங்கு செய்ய) நினைக்கத் தான் முடியுமா?]

இந்திரன் தன் பெரும் பகைமை யுணர்ச்சியால் லங்கேசன் தங்கையை இப்படிப் பரிபவம் செய்திருக்கலாமோ?—என்பதாகத்தானே ஓர் ஆராய்ச்சி.

ஆனால் போரில் தோற்ற தேவேந்திரன் ராட்சசேந்திரனுக்குத் தொண்டு செய்யும் அடிமையாகி விட்டானே! திருமாலோ, சிவபெருமானோ இப்படி ராவணனைக் கோப மூட்டியிருக்கலாம் என்றால், அதற்கும் வழிஇல்லையே— என்கின்றன ராட்சஸ மூளைகள்.

'போரிலான் புரந்தரன்,
ஏவல் பூண்டனன்;
ஆருலாம் நேமியான்
ஆற்றல் தோற்றுப்போய்
நீரினன்; நெருப்பினன்
பொருப்பி னன்! இனி
யார்கொலாம் ஈ(து)?' என
அறைகின் றார்சிலர்.

[புரந்தரன்—இந்திரன். ஆருலாம் நேமியான்—கூர்மையான சக்ராயுதத்தை உடைய விஷ்ணு. நீரினன்—நீரில் விழுந்து விட்டான். நெருப்பினன்—கையிலும் நெற்றிக் கண்ணிலும் நெருப்பை உடைய சிவன்; மேனியெல்லாம் நெருப்பு மயமான காலாக்கினி ருத்திர மூர்த்தி. பொருப்பினன்—மலைவாசி யானான். இனி யார் கொலாம் ஈது—வேறு யாரோ இது செய்தவர். அறைகின்றார்—முழக்கமாய்ப் பிரஸ்தாபிக்கின்றவரானார்கள்.]

ராவணனுக்கு அஞ்சித் திருமால் நீரிலே விழுந்து விட்டதாகவும், இதே அச்சத்தால் சிவ பெருமான் மலையில் ஒளிந்து கொண்டதாகவும் ஒருவகைச் சரித்திர ஆராய்ச்சியும் நடத்தி விட்டார்கள் இலங்கை வாசிகள்.

வேறொரு வகையில் ஒரு விஞ்ஞான ஆராய்ச்சியும் நடக்கிறது— மனோதத்துவ விஞ்ஞான ஆராய்ச்சி! "யாரோ பைத்தியக்காரர் பைத்திய மிகுதியால் இந்தக் காரியம் செய்திருக்க வேண்டும்! இது காரணமாகத் தமக்கும் உலகத்திற்கும் முடிவை அல்லவோ தேடிக் கொண்டார்கள்? ராவண பயத்தினால் அறிவு தடுமாறி இப்படியும் ஒரு பைத்தியம் ஏற்பட்டிருக்கலாம்' என்றெல்லாம் சிலர் ஊகஞ் செய்து பார்க்கிறார்கள்.



போகம் சோகம் ஆகிறது

இத்தகைய ஆராய்ச்சிகளெல்லாம் வெகு விரைவில் ஒரே அழுகையாகின்றன. சூர்ப்பணகை காதறையும் மூக்கறையுமாய்த் தோன்றுவதற்கு முன் இலங்கை என்ற போக பூமியில் ஆராய்ச்சிகளுக்கோ, கவலைகளுக்கோ, சோகத்திற்கோ இடமில்லை. 'வாழ்வு வாழ்வதற்கே' என்பர் இந்நாளில். ராட்சஸப் பேராசிரியாகளோ 'உல்லாஸ வாழ்வு வாழ்வதே வாழ்க்கை!' என்று சித்தாந்தஞ் செய்து விட்டனர்.

சங்கீத சரஸ்வதியும் 'போகம்' என்ற தேவிக்கு அடிமைதான், இந்திரன் ராவணனுக்கு அடிமையாக இருப்பது போல! தேவ அடிமைகளில் சிலர் மிருதங்கம் முதலான மங்கள வாத்தியங்களை முழக்கிக்கொண்டிருந்தார்கள். சிலர் வீணை கானம் செய்து கொண்டிருந்தார்கள். வேறு சிலர் யாழ்கொண்டு அரக்கரைக் களிப்பித்தார்கள். இன்னும் சிலர் புல்லாங்குழல் ஊதி இதயங்களை வசீகரித்தார்கள். சில அரக்கர்கள் சங்கு ஊதியும் எக்காளம் ஊதியும் பொழுது போக்கினர்கள். திடீரென்று புது வெள்ளம் வந்து பழைய வெள்ளத்தைப் போக்கி விட்டதுபோல் என்றும் இல்லாத அழுகுரல் பிறந்து இசை வெள்ளத்தைத் தூத்தி விடுகிறதாம்:



முழவினில், வீணையில்,
முரல்நல் யாழினில்,
தழுவிய குழலினில்,
சங்கில், தாரையில்
எழுகுரல் இன்றியே,
என்றும் இல்லதோர்
அழுகுரல் பிறந்த(து)அவ்
இலங்கைக்(கு)
அன்(று)அரோ!

[முழவினில் — மத்தளத்திலிருந்து. முரல்—ரீங்காரம் செய்வதுபோல் இசைக்கின்ற. தழுவிய — உள்ளங்களைத் தழுவியது போல வசீகரிக்கின்ற. குழல் — புல்லாங்குழல். தாரை — எக்காளம். எழுகுரல் — எழுகின்ற மங்களத் தொனிகள்.]

சூர்ப்பணகை திடும்பிரவேசமானதும் இப்படி ஒரு மாறுதல் — புரட்சிகரமான மாறுதல் — போக பூமியிலே.

சில ராட்சஸப் பெண்மணிகள் சிங்காரப் பூஞ்சோலையில் ஊஞ்சலாடுகிறார்கள். பாக்கு மரங்களுக்கிடையே தொங்குகிறது ஊஞ்சல். உல்லாஸமாக அந்த ஊஞ்சல்கள் விசையாட்டம் ஆடுகின்றன. இப்போது

இம் மகளிர் காதில் விழுகிறது சூர்ப்பணகையின் கதறல். உடனே உல்லாஸ ஊஞ்சலும் வெறுத்துப் போகிறதாம்: போகம் எவ்வளவு வேகமாய்ச் சோகமாக முடிகின்றது பாருங்கள் :

பொற்றலை மரகதப்
பூகம் நோவுறச்
சுற்றிய மணிவடம்
தூங்கும் ஊசலின்
முற்றிய ஆடலின்,
முனிவுற்(று) ஏங்கினர்,
சிற்றிடை அலமரத்
தெருவு சேர்கின்றார்.

[பொற்றலை-பொன்தலை; பொன்னிறமான (முதிர்ந்த பழுக்காய்க் குலைகளை) மேல் இடத்தில் உடைய. மரகதப் பூகம் – மரகதப் பச்சை போலத் தோன்றும் பாக்கு மரங்கள். நோவுற – நொந்து வருந்துவதாய்த் தோன்றுமாறு. மணி வடம் – இரத்தினங்களின் நிறம் போலச் சாயம் பூசிய மணிக் கயிறுகளில். தூங்கும் – தொங்குகிற. ஊசலில் – ஊஞ்சலிலிருந்து. முற்றிய ஆடலின் – விசை மிகுதியாக ஆடுதலின். முனிவுற்று – வெறுப்புக் கொண்டு. சிற்றிடை அலமா – நுண்ணிய இடை வருந்த.]

பச்சை நிறப் பாக்கு மரங்கள் பொன்னிறமான பழுக்காய்க் குலைகளுடன் விளங்க, அந்த அழகிய மரங்களில் பன்னிற மணிக் கயிறுகள் சுற்றி ஊஞ்சற் பலகை தொங்கவிட்டிருக்கிறதாம். இந்த ஊஞ்சலில் மகளிர் விசையாட்டம் ஆடுகிறார்கள், 'பாக்கு மரங்கள் நொந்து வருந்துகின்றன!' என்று சொல்லும்படி. கதறல் காதில் விழுந்ததும் மகளிர் ஊஞ்சலிலிருந்து குதித்து ஏங்கிய முகங்களுடன் நுண்ணிடை துவளத் தெருவில் வந்து சேர்கிறார்கள்.

சில மகளிர் புலம்பி விழுந்து வீதியில் புரள்கின்றார்கள். சிலர்—உறங்கிக் கொண்டிருந்த இளமங்கையர்—கதறல் கேட்டுத் திடுக்கிட்டு விழித்துக் கொண்டு அப்படியே மனம் சோரக் கூந்தல் சோர மேகலாபரணம் சோர்ந்து விழத் தெருவுக்கு வந்து விடுகிறார்கள். சில மகளிர், 'ராவணேச்வரனுடைய விஜயப் பிரதாபம் என்ன? இந்தத் தங்கையின் இன்றைய பரிதாப நிலை என்ன?' என்று வயிற்றில் அடித்துக் கொண்டு அப்படியே தளர்ந்து சூர்ப்பணகையின் காலில் வந்து விழுகிறார்கள் :

'அங்கையின் அரன்கயிலை
கொண்டதிறல் ஐயன்
தங்கைநிலை இங்(கு)இதுகொல்?'
என்றுதளர் கின்றார்,
கொங்கைஇணை செங்கையின்
மலைந்து,குலை கோதை
மங்கையர்கள் நங்கைஅடி
வந்துவிழு கின்றார்.

[அங்கை – அகங்கை. அரன் – சிவபெருமான். ஐயன் – இங்கே ராவணன். செங்கையின் – சிவந்த கைகளால். மலைந்து – மோதிக் கொண்டு. குலை கோதை – குலைந்து அவிழ்ந்து தொங்கும் கூந்தல். நங்கை – இங்கே சூர்ப்பணகை.]

இப்படி இம்மங்கையர் சூர்ப்பணகை காலில் விழ, இந்தத் தங்கை போய்த் தமையனார் காலில் விழுந்து புலம்பப் போகும் காட்சியை அடுத்த இதழில் பார்க்கலாம்.



270. ராவண கோபம்

அவனோ உயர்வற உயர்ந்த வைபவத்துடன் வீற்றிருக்கிறான். அவளோ இழிவற இழிந்த நிலையில் வருகின்றாள். இலங்கைவாசிகள் அனைவரும் கொடுந் துயரமடைய ராவண சபையை நோக்கி வந்து விடுகிறாள். இப்படித் தர்பாரில் திடும் பிரவேசம் செய்ததும் அந்தக் காதறையும் மூக்கறையுமான கோரம் கண்டு, அந்த அலறல்கள் கேட்டு ராவண கோபம் எப்படிப் பொங்கியிருக்க வேண்டும்!

நின்றவர், இருந்தவர், விழுந்தவள்

கொலு மண்டபத்தில் சிலரே உட்கார்ந்திருக்கும் பாக்கியசாலிகள். பலரும் நின்றுகொண்டுதானே இருக்க வேண்டும்? மூன்றுலகுடையவன் சன்னிதானமல்லவா? தலைமைச் சேவகர்களான பிரகஸ்பதி பகவானும் சுக்கிராசாரிய ஸ்வாமியும் ஆசனங்கள் கொண்டு போடக் கொலுவிருக்கும் பாக்கியசாலிகளைப் பார்த்துப் பார்த்தே எவ்வளவு பொறாமையுடன் பெருமூச்சு விட்டிருப்பார்கள், ஆசனம் பெறாமல் நின்று கொண்டிருப்பவர்களெல்லாம்! ஆனால் சூர்ப்பணகை வந்து சேர்ந்ததும், நின்றவர்களைக் குறித்துத்தான் இருந்தவர்கள் பொறாமை கொள்கிறார்களாம்.

ஏன்? சூர்ப்பணகையின் கோபம் கண்டு ராவண கோபமும் கண்டவர்கள் ஓடத்தான் வழி பார்க்கிறார்களாம். எப்படியாவது, எங்கேயாவது ஓடிப் போக விரும்புகிறார்கள். ஓடிப் போவதில் நின்றவர்களுக்குத் தானே வசதி அதிகம், இருந்தவர்களைக் காட்டிலும்?

இப்படி நின்றவர்களும் இருந்தவர்களும் ஓடும் வழி தேடுமாறு தமையனார் காலில் வந்து விழுகிறாள் தங்கச்சியம்மாள்:

நின்றவர், இருந்தவ-
றொ(டு)ஒடு நெறிதேடக்,
குன்றின்அடி வந்துபடி
கொண்டலென, மன்னன்
பொன்திணி கருங்கழல்
விழுந்தனள், புரண்டாள்.

[படிகொண்டல் — படிகின்ற மேகம். பொன்திணி — பொன்மயமாய் அமைந்த. கருங்கழல் — (இங்கே) பெரிய வீரக்கழல் அணிந்த பாதம்.]

மலையில் மேகம் வந்து படிவது போன்ற ஓர் இயற்கைத் தோற்றத்தை எவ்வளவு பிரத்தியட்சமாகப் பார்த்திருப்பானோ அவ்வளவு பிரத்தியட்சமாகப் பார்த்து விடுகிறான் கவிஞன், ராவணன் காலில் சூர்ப்பணகை விழுந்து புரண்டு கொண்டிருப்பதை! மன்னர்கள் முடிபட விழுந்து வணங்கிய அதே வீரக்கழல்கள் அணிந்திருக்கும் அதே அடிகளில் தான் இந்த அருமைத் தங்கையும் விழுந்து புரள்கின்றாள்.

இந்த நிலையில் சபை யெல்லாம் குழம்பிப் போவதும், அச்சபையினருக்கு அகில உலகும் குழம்பியதாகத் தோன்றுவதும் ஆச்சரியமா? பயபக்தர்களின் கண்கள் இருண்டு போவதால் மூவுலகும் இருளடைந்து விட்டது போலத் தோன்றுகிறது.

எரிந்த கண், நடுங்கிய உலகு, இடித்த குரல்

இப்படி யெல்லாம் சபை படும் பாடு எத்தகைய கோபாவேசத்தைக் காண்பதின் விளைவாக இருக்க வேண்டும்! அந்தக் கோப வெறியை நாமும் பார்க்கிறோம், திகிலடைந்து திக்பிரமை கொள்ளாமலே, இந்தக் கவிதைக் கண்ணாடி வாயிலாக:

விரிந்த வலயங்கள்மிடை
தோள்படர, மீதிட்(டு)
எரிந்த நயனங்கள்,
எயிறின்புறம் எறிப்ப,
நெரிந்த புருவங்களிடை
நெற்றியினை முற்றத்,
திரிந்த புவனங்கள்; வினை
தேவரும் அயர்த்தார்.

[வலயங்கள் — வளைகள்; (இங்கே) வீரர்கள் அணியும் தோள் வளைகள். மிடை — நெருங்குகிற. மீது இட்டு எரிந்த — கோப ஜ்வாலை மிகுதியாகப் பொங்க. நயனங்கள் — கண்கள். எயிறு — பற்கள். புறம் - வெளி. இடை நெற்றி — நடு நெற்றி. முற்ற — மேல் ஏறுவது போலத் தோன்ற. திரிந்த — சுழல்வதுபோலத் தோன்றின. புவனங்கள் — உலகங்கள். வினை — தொழில்; இன்னது செய்யலாமென்பது. அயர்த்தார் — மறந்து சோர்ந்தார்கள்.]

தோள் வளைகள் விரிகின்றனவாம் பூரிக்கின்ற தோள்கள் மீது படர்வது போல. அவ்வளவு தூரம் வீராவேசத்தைத் தூண்டி விடுகிறது கோபாவேசம். வீரவெறிக்கு இலக்கு ஒன்றும் இல்லாததால், நெரிந்த புருவங்கள் நெற்றியில் ஏறக் கண்கள் புலியின் கண்கள் போல் எரிகின்றனவாம்: அவ்வளவு கோப மிகுதி. பற்களும் கோபாக்கினியைக் கக்கு

வதுபோல் ஒளி வீசுகின்றன. இத்தகைய ராவண கோபத்திலே மற்றவர்களுக்கு மட்டுமா உலகமெல்லாம் சுற்றிச் சுழல்வதுபோலத் தோன்றும்? ராவணனுக்கும்தான் உலகம் பம்பரம் சுற்றுவதுபோலச் சுற்றுகிறது! தேவர்களோ தொழில் மறந்து சோர்ந்து போகிறார்களாம். இவ்வளவு சொல்லியும் இன்னும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தாலும் இந்த ராவண கோபத்தை எந்தப் பாஷை கொண்டு எப்படித்தான் சொல்ல முடியும் என்ற உணர்ச்சிதான் ஏற்படக்கூடும். பொருளை ஒருவாறு தெரிந்து கொண்டு பாட்டைச் சவுக்கமாகப் பாடிப் பாடி அனுபவிக்க வேண்டியதுதான்!

ஆம், கோபமும் அனுபவிக்கக் கூடியதுதான் இலக்கியத்திலே — கவிதையிலே. எல்லாரும் நடுங்குகிறார்களே நமனை நினைத்ததும், அந்த நமனும் நடுங்கிப் போகிறானாம் மற்றத் தேவர்களைப்போல், 'எல்லாருக்கும் இறுதி விளக்கும் நமக்கு இறுதி வந்து விட்டது!' எனப் பேச்சு மூச்சின்றிப் பிரமித்துப் போகிறானாம்.

இவ்வளவு கோபமும் இதோ உச்சநிலை அடையப்போகிறது பாருங்கள் :



மடித்தபில வாய்கள்தொறும்
வந்துபுகை முந்தத்,
துடித்ததொடர் மீசைகள்
சுறுக்கொள உயிர்ப்பக்,
கடித்தகதிர் வாள்எயிறு
மின்கனல, மேகத்(து)
இடித்தஉரும் ஒத்(து)உரறி,
'யாவர்செயல் ?' என்றான்.

[மடித்த – உதடு மடித்த. பிலவாய்கள் – குகை போன்ற வாய்கள். தொடர் மீசை – தொடர்ச்சியுள்ள மீசை. சுறுக்கொள உயிர்ப்ப–கோபாக்கினியோடு வெளிப்பட்ட பெருமூச்சில் வெதும்பிச் சுருங்கியது போலத் தோன்ற. கதிர்வாள் எயிறு – ஒளியும் கூர்மையும் உள்ள பற்கள். மின் கனல – மின்னல்களைப்போல் கோபாக்கினி கக்க. உரும் ஒத்து உரறி – இடிபோல் அலறி.]

உதடு மடிந்து குகை போலத் திறக்கும் பத்து வாய்களிலும் கோபாக்கினி கனன்று புகைந்து கொண்டிருக்கிறது பெருமூச்சுடன். தொடர்ச்சியாக முறுக்கி விட்டிருக்கும் மீசைகள் பயங்கரமாகத் துடித்துப் படபடக்கின்றன. பற்களை நெற நெற வென்று கடிக்கின்ற கடியில் மின்னல்கள் கங்கும் கனலுமாய்த் தெறித்து விழுவது போலத் தோன்றுகிறது. மேகத்தினிடையே சடசட வென்று இடிக்கும் இடிபோலக் கோஷிக்கிறது ராவணன் குரல்.

'யார் செய்கை?' என்பதுதான் இடிக் குரல் முழக்கும் கேள்வி. அதற்கு மேல் பேசவில்லை, பேச முடியவில்லை. கோபம் அறிவைப் புகைக்கிறது, மூச்சை அடைக்கிறது, ஆங்காரத்தைப் பெருக்குகிறது. பெருங் கோபத்தை 'ரௌத்திராகாரம்' என்பர். இந்தக் கவியோ ராவண கோபத்தை ராவணாகாரமாகவே வருணித்திருக்கிறான். இந்த ராவண கோப வருணனை உலக இலக்கியத்திலே அபூர்வமாய்க் காணப்படுகிற சப்த ஜால சித்திரங்களில் ஒன்று என்பது பேரறிஞர் வ. வே. சு. ஐயரின் அபிப்பிராயம்.

* * * *

தமையன் கேள்விக்குத் தங்கை பதில் சொல்கிறாள். 'அரசர்கள் எல்லாரும் நாட்டி லிருந்து கொண்டு காட்டை ஆளுகிறவர்கள். இந்த ஆசாமிகளோ காட்டில் வந்து இருந்து கொண்டு இராஜ்யத்தை ஆளுகின்றார்' என்று பேச ஆரம்பிக்கிறாள் :

கானிடை அடைந்துபுவி
காவல்புரி கின்றார் !

உடனே அவர்களுடைய ஒப்பற்ற மேனி யழகை வருணிக்கத் தொடங்குகிறாள். ராவணனுடைய ஆத்திரம் கண்டு 'ஆனாலும் ஆசாமிகள் மானிடர்களே' என்று முடிக்கிறாள் :

'மானிடர் தடிந்தனர்கள்
வாள்உருவி' என்றாள்.

[தடிந்தனர் - (இங்கே) அங்கபங்கம் செய்தார்கள்.]

'மானிடர் தடிந்தனர்கள், வாளுருவி — என்ன தடித்தனம்!' என்று சொல்லியும் சொல்லாமலும் நிற்கின்றாள் சூர்ப்பணகை.

இதற்கு ராவணன் என்ன சொல்லப் போகிறான் தெரியுமா ? வெடிபடச் சிரிக்கிறான் : அவ்வளவு அவநம்பிக்கை ! எப்படி நம்ப முடியும் ? 'ஓஹோ, மானிடரா ?' என்று ஒரே ஆங்காரச் சிரிப்பு.